**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்-2 ✧ இதழ்-7 ✧ பிப்ரவரி 2020

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**S. இராமநாதன்**
**K. செல்வராஜு**
**R. ஜெயராமன்**
**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

# மின்தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்க தனியார்மயத்தை எதிர்ப்போம்

**2020** ஜனவரி 8ல் இந்திய தொழிலாளர் வர்க்கம் தொழிலாளர்களுக்கு எதிரான சக்திகளை முறியடிக்க வேள்வி பூண்டு வேலை நிறுத்தம் செய்து எதிர்ப்பை காட்டியிருந்த போதிலும் முதலாளித்துவத்தின் கரம் ஓங்கி நிற்பது கண்கூடாகத் தெரிகிறது.

BSNL நிர்வாகத்தில் நிதி நெருக்கியைக் காரணம் காட்டி லட்சத்திற்குட்பட்டோர் விருப்ப ஓய்வில் அனுப்பி வைத்திருப்பது 2020 ஜனவரி 31 BSNLல் கருப்பு தினமாக பார்க்கப்படுகிறது.

ஊதிய உயர்வு கேட்டும், வங்கிகளை இணைக்காதே என்று குரல் கொடுத்தும் வங்கி ஊழியர்கள் அகில இந்திய அளவில் போராட்டம்.

இந்தியன் ஏர்லைன்ஸ் 100% விற்பனை செய்வதற்கு தனியார் முதலாளிகளின் வரவை எதிர்நோக்கி இந்திய பாராளுமன்றத்தின் வாயிற் கதவுகள் திறந்தே கிடக்கின்றன.

1956ல் தொடங்கப்பட்ட LIC 100% தனியார் மயப்படுத்திட தயாராகிவிட்டார்கள்.

மின்சார வாரியங்கள் பிரிக்கப்பட்ட அனைத்து இடத்திலும் விநியோகப் பிரிவினை பல கம்பெனிகளாக பிரிக்க முழுவீச்சில் மாநில அரசுகள் செயல்பட வேண்டுமென கட்டாயப்படுத்துகிறது மத்திய அரசு.

பீகாரில் மின்சார வாரிய விநியோகத்தை முழுமையாக தனியார் மயமாக்கிட முனைந்ததை எதிர்த்து போராடிய தொழிலாளர்களுக்கு காவல்துறையை ஏவி தடியடியை பரிசாகத் தந்திருக்கிறது மாநில அரசு.

தமிழக மின்சார வாரியம் மிகப் பெருமளவில் நட்டத்தில் இயங்குவதாக தினசரி பத்திரிகைகள் அபாயச் சங்கினை ஊதிக் கொண்டிருக்கின்றன.

பல்லாயிரக்கணக்கில் பணியிடங்கள் காலியிடங்களாக உள்ள நிலையில் கரத்தால் உழைப்போரும் கருத்தால் உழைப்போரும் வெம்பி விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மின் விபத்து செய்திகள் தினசரி வந்த வண்ணமே உள்ளது. சொற்ப எண்ணிக்கையில் பணியில் இருக்கும் உள்ள தொழிலாளர்களை விபத்தில் இழந்து தவிக்கும் நிலையில் உள்ளோம்.

விபத்துகளின் காரணமறிந்து விபத்தில்லா மின்சார வாரியமாக மாற்றிட முயற்சிக்க வேண்டும்! அறிவிப்பு மட்டும் போதாது! போதுமான ஆட்களை நியமிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு வர வேண்டும்!

பாதுகாப்பான சூழ்நிலையில் அமைப்பு சார்ந்த, சாராத பணிகளில் ஈடுபட்டு வந்தாலும் உலக மகளிர் தினம் ஒட்டு மொத்த பெண்களுக்கு மகிழ்வாய் அமையட்டும். இருந்த போதிலும் பாலியல் வன்கொடுமை நாட்டில் தலைவிரித்தாடுவதால் பள்ளி செல்லும் இளந்தளிர் முதல் வாழ்ந்து முடித்த மூதாட்டி வரை முட்புதர்களில் எச்சமாக வீசியெறியப்படுகின்றனர். இந்நிலை மாறுகிற அளவில் பாலியல் வன்முறையற்ற சமுதாயமாக உருவாக்கிட மகளிர் தினம் விழிப்புணர்வை ஏற்படுத்தட்டும்.

மின்சார வாரியத்தின் தொழிலாளர்கள், அலுவலர்கள் பொறியாளர்களென அனைவரது நலனையும் கருத்தில் கொண்டு செயல்படும், எம்ப்ளாயீஸ் பெடரேஷனின் பணி மேலும் சிறப்பாக அமைத்திட வேண்டிய அவசியத்தை உணர்த்துகிற வகையில் நெல்லையில் நடைபெற்ற TNEB வரைவாளர் சங்க பொதுக்குழுவில் வரைவாளர் சங்கம் எம்ப்ளாயீஸ் பெடரேஷனோடு இணைப்பினை ஏற்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எம்ப்ளாயீஸ் பெடரேஷனின் பயணத்தில் இது ஒரு மைல் கல்லாகினும் ஒரு குடையின் கீழ் ஒட்டுமொத்த தொழிலாளர்களைக் கொண்டு வருவதற்கான அச்சாணியாக இது அமையுமென நம்புவோம்.

தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிற்சங்கம் தனது பொன்விழா மாநாட்டை சிறப்புடன் கொண்டாடியுள்ளது. சகோதர சங்கமாக மாநாட்டு கோரிக்கைகள் வெற்றியடைய வாழ்த்துகளை உரித்தாக்கிடுவோம்.

மின்வாரிய மறுசீரமைப்புக்கான முத்தரப்பு ஒப்பந்தம் தொடர்பாக ஒருமித்த கருத்தை உருவாக்கி அனைத்து சங்கங்களும் கூடி கையொப்பமிட்டிருக்கின்றன. தொழிலையும் தொழிலாளர்களையும் பாதுகாப்பதில் முன்நிற்போம். மின்சாரத் தொழிலாளர்களின் அரணாக விளங்கிட முன்னேறுவோம். சேவைத்துறையாம் மின்துறையை வியாபாரத்துறையாக மாற்றிட அனுமதியோம்.

***– ஆசிரியர்***

# செயற்குழு சுற்றறிக்கை

நாள் : 27.01.2020

**அன்பிற்கினிய தோழர்களே! வணக்கம்.**

தமிழ்நாடு எலக்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில செயற்குழு கூட்டம் 2020 ஜனவரி 25 மற்றும் 26 தேதிகளில் தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்க்ள தலைமையில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அஜந்தா ஹோட்டலில் நடைபெற்றது.

மாநில உபதலைவரும் திருச்சி மாநகர செயலாளருமான திரு. K. கஸ்தூரி, மாநில உபதலைவர் திரு. N. லஷ்மணன், நாமக்கல் முன்னாள் செயலாளர் திரு. K. பழனிச்சாமி ஆகியோரது மறைவுக்கு புகழஞ்சலி செலுத்தும் வகையில் நிழற்படங்களுக்கு மலர்தூவி மௌனம் கடைபிடிக்கப்பட்டது.

தலைவர் தலைமையுரையில் அனைவருக்கும் குடியரசு தின வாழ்த்துகளை தெரிவித்தும், மறைந்த தலைவர்களின் பெருமைகளை எடுத்துக் கூறியும் உரை நிகழ்த்தினார்கள்.

மூன்றாமாண்டு துவக்கத்திலிருக்கும் நேரத்தில் எதிர்கொள்ள உள்ள விபரங்களை குறிப்பிட்டதுடன் இன்றுள்ள அரசியல் சூழ்நிலை, ஆட்சியாளர்களின் நிலைபாடுகள், தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக அரசுகள் தொடரும் செயல்பாடுகளையெல்லாம் குறிப்பிட்டு பேசினார்கள்.

2020, ஜனவரி 8 வேலை நிறுத்தம் முழுவீச்சுடன் மின்சார வாரியத்தில் நடைபெற்றதில் நமது பெடரேஷனின் அளப்பரிய பங்கினை குறிப்பிட்டு களப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்தார்கள்.

உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்தல் வேலைத்தன்மையை மேம்படுத்துதல் போன்ற ஆலோசனைகளுடன் கூடிய உரையில் செயற்குழு உறுப்பினர்களின் விவாதம் சிறப்பாக அமைய கேட்டுக் கொண்டார்கள்.

பொதுச்செயலாளர் தனது உரையில் கடந்த 2019 ஜனவரி முதல் நடைபெற்ற செயற்குழு கூட்டங்களின் முடிவுகளையும், அம்முடிவுகளை நடைமுறைப்படுத்த நாம் எடுத்த முயற்சிகளையும் வாரியத்தின் செயல்பாடுகளையும் குறிப்பிட்டு பேசினார்கள்.

வேலைபளு பதவி அனுமதிப்பதில் அசைவற்ற தன்மையை மேற்கொண்ட வாரியத்தை உத்தரவுகள் வெளியிட வைக்க தனிப்பட்ட இயக்கங்களும் தொழிற்சங்கங்களின் கூட்டு முறையீடும் காரணமாக அமைந்திருந்தது என குறிப்பிட்டதுடன் 1.12.2019 முதல் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை துவக்க கமிட்டி அமைத்திருப்பதும், மின்சார வாரிய சீரமைப்புக்கான முத்தரப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்த வாரியமும் விரைந்து வருவதையும் குறிப்பிட்டு பேசினார்கள்.

2020ல் உறுப்பினர் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பது, எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ் சந்தா எண்ணிக்கையை அதிகரிப்பது, கட்டிடம் தொடர்பான பணிகளை இவ்வாண்டு இறுதிக்குள் முடிப்பது போன்ற விபரங்களை மேற்கோளிட்டதுடன் எம்ப்ளாயீஸ் பெடரேஷனை மேலும் வலுப்படுத்திட ஒத்த கருத்துடைய தொழிற்சங்கங்களை இணைப்பு செய்திட முயற்சிகள் மேற்கொண்டிடும் தகவல்களையும் குறிப்பிட்டார்கள்.

ஜனவரி 8ல் நடைபெற்ற வேலை நிறுத்தம் 40%க்கு மேல் தொழிலாளர்களை கலந்திட வைப்பதற்கு பிரச்சாரம் மேற்கொண்ட அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்தார்கள்.

பொருளாளர் கடந்த ஆண்டுக்கான வரவு செலவு அனுப்பியுள்ள கிளைகள் குறித்த விபரம் குறிப்பிட்டு அனுப்பாத கிளைகள் 2019ம் ஆண்டுக்கான வரவு செலவு கணக்கை முடித்து ‘‘ஈ’’

படிவம் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக உடன் அனுப்பிட கேட்டுக் கொண்டார்கள். கட்டிடநிதி, எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ் மற்றும் பொது கணக்கில் சந்தா, நன்கொடை போன்றவைகளை கிளைகள் செலுத்தும் சமயம் உடன் தகவல் தந்து கணக்கு பராமரிக்க உதவிட கேட்டுக் கொண்டதுடன் உத்தேசமான ஆண்டு வரவு செலவு கணக்கினை சமர்ப்பித்து முழுமையான கணக்கு முடிந்தவுடன் தணிக்கைக்கு அனுப்பப்படும் என குறிப்பிட்டார்கள்.

செயல் தலைவர் தனது உரையில் களப்பணியில் உள்ள சிரமங்கள், காலியிடங்கள், ஏற்படும் விபத்துகள், ஆட்களே இல்லாமல் பணி செய்யும் நிலை, பிரிவு அலுவலகங்கள் ஓரிருவரை மட்டுமே கொண்டும் இயங்கும் நிலைமை, தனியார்மயப்படுத்த ஏற்படுத்தும் முயற்சிக்கான வேலையாக இருக்குமோ என அச்சம் உள்ளது என குறிப்பிட்டு மின்சார வாரியத்தின் போக்கினை மாற்றிட நமது கட்டமைப்பை மேலும் வலுப்படுத்திட துரித நடவடிக்கை மேற்கொண்டிட வழிகாட்டி பல்வேறு விபரங்களை குறிப்பிட்டு பேசினார்கள்.

வேலை நிறுத்தத்தில் நமது பங்கினை குறிப்பிட்டு பேசி கலந்து கொண்ட அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்ததுடன் களப்பணி காலியிடங்களை பூர்த்தி செய்யவும், ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தர செய்யவும் நாம் தொடர் முயற்சிகள் மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டிட கேட்டுக் கொண்டார்கள்.

அமைப்பு செயலாளர் தனது உரையில் மத்திய அரசு தொழிலாளர் வர்க்கத்தின் மேலும் தொடர் தாக்குதலை ஏற்படுத்தி வருவதை எதிர்த்தும் அரசின் நிலையின் மாற்றமில்லையென குறிப்பிட்டதில் ஜனவரி 8ல் தேசம் முழுவதும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த நிலையில் அன்றே பாரத் பெடரோலியத்தினை தனியார் மயப்படுத்தி உத்திரவிட்டுள்ளதை குறிப்பிட்டு பேசினார்கள்.

தொழிற்சங்க சட்டம் 44ஐ நான்காக குறுக்கி கொண்டு வந்ததின் நோக்கமே தொழிற்சங்க செயல்பாடுகளை முடக்கவும், பொதுத் துறைகளை ஒழித்து தனியார்மயப்படுத்தவும் என்பதுதான் புலனாகிறது என குறிப்பிட்டு பேசியதுடன் தொழிலாளர் விரோத போக்கை எதிர்த்து தொடர்ந்து போராட தொழிற்சங்கங்கள் மேலும் வலிமையாக வேண்டும் என குறிப்பிட்டு பேசினார்கள்

தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கத்தின் பொன்விழா மாநாடு சென்னையில் நடைபெற்று வருவதில் கலந்து கொண்டுதான் செயற்குழு கூட்டத்திற்கு வந்திருப்பதை குறிப்பிட்டு பேசி சிறப்பான மாநாடாக நடந்து கொண்டிருக்கிறது, மாநாட்டு கோரிக்கைகள் வெற்றி பெற சகோதர சங்கமான நமது வாழ்த்துகளை தெரிவிப்போம் என குறிப்பிட்டு பேசினார்கள்.

செயற்குழு உறுப்பினர்களின் விவாதங்களுக்கு பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. **களப்பணி காலியிடங்களை நிரப்பிட ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்திட பேச்சுவார்த்தை நடத்திட மின்சார வாரியமும், தமிழக அரசும் முன்வர வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
2. **உதவி வரைவாளர் மற்றும் தட்டச்சர் பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்திட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
3. **மின்சாரச் சட்டத்தைப் பயன்படுத்தி மின்சார வாரியத்தை மேலும் பல கம்பெனிகளாகப் பிரித்து தனியார் மயப்படுத்த எடுக்கும் நடவடிக்கையை கைவிட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
4. **தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் நிர்வாகப் பிரிவினர் மற்றும் மின்வட்டங்களில் பணியாற்றும் நிர்வாகப் பிரிவினர் அனைவருக்கும் ஒரே மாதிரியான மேல் பதவிகள், ஊதியமும் அளித்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.**

5. இளநிலை பொறியாளர் IIம் நிலை முதன்மை பட்டியல் தொடர்பான வழக்குகளை வாரியம் விரைந்து முடிவுக்கு கொண்டு வர இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

6. 1.12.2019 முதல் ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தையை உடன் தொடங்கிட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

7. களப்பணியில் சிறப்பு நிலை முகவருக்கு மேல் பதவியான Field Technical Officer என்ற பதவி Class IIல் உருவாக்கிட இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

8. GCC, P&C, Hydro Stations, NCES போன்ற வேலைபளு ஒப்பந்தத்தில் வராத பகுதிகளுக்கு புதிய பதவிகள் அனுமதிக்க தனியாக கமிட்டி அமைத்து பேச்சுவார்த்தை நடத்திட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

9. உடுமலை மற்றும் திருநெல்வேலியில் உள்ள NCESல் பணிபுரியும் மின்பாதை ஆய்வாளர்களுக்கு ஆக்க முகவர் பதவி உயர்வுக்கான 12 வருட கால பணி அனுபவம் என்பதை 10 வருட காலமாக குறைத்து பதவி உயர்வு வழங்கிட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

10. பல்வேறு வட்டங்களில் தொழிலாளர்களுக்கு சீருடை மற்றும் கையுறை வழங்கப்படாமல் உள்ளதை விரைந்து வழங்கிட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

11. மின்விபத்துகள் தொடர்ந்து நடைபெறுவதும் தொழிலாளர்கள் இறப்பதும் வாடிக்கையாவதை நிறுத்திட பாதுகாப்பு வகுப்புகள் (Safety Class) நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தி விபத்துகளை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ள மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

12. மின்வட்டங்களில் தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவது குறித்து கவலை தெரிவித்த இச்செயற்குழு தலைமை பொறியாளர் (பணியமைப்பு) அலுவலகத்திலிருந்து மின்வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் களப்பணியாளர்களுக்கு முறையாக ஒவ்வொரு ஆண்டும் பதவி உயர்வு வழங்கப்படுவதற்கான பணிகள் நடைபெறுகிறதா என்ற விபரம் கேட்டுப் பெற நடவடிக்கை எடுத்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

13. எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ் ஆண்டு சந்தா அனைத்தையும் ஆயுள் சந்தாவாக மாற்றிட முயற்சிகள் மேற்கொண்டிட இச்செயற்குழு கிளைகளை கேட்டுக் கொள்கிறது.

14. கீழ்கண்ட தேதிகளில் இவ்வாண்டுக்கான செயற்குழு கூட்டங்களை நடத்திடுவது என தீர்மானிக்கிறது.

| | |
|---|---|
| 2020 March 7, 8 | 2020 Sep 26, 27 |
| 2020 May 9, 10 | 2020 Nov 28, 29 |
| 2020 July 25, 26 | 2021 Jan 23, 24 |

15. களப்பணி, நிர்வாகப்பணி, கணக்குப் பணி, கணக்கீட்டுப் பணி, தணிக்கைப் பணி, பண்டக சாலைப் பணி, தொழில்நுட்ப பணி (பொறிஞர்) என ஒவ்வொன்றிற்கும் தலா ஒருவரை பரிந்துரை செய்து கிளைகள் விரைந்து தலைமைக்கு அனுப்பிட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

16. 2020, மார்ச் 8ல் மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானிக்கப்பட்டது, மகளிர் நிர்வாகிகளை பங்கெடுத்திட வைத்திட முயற்சிகள் மேற்கொண்டிட கிளைகளை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

17. எம்ப்ளாயீஸ் பெடரேஷன் செயல்பாடுகளை முறைப்படுத்தி வழி நடத்த உயர்மட்ட குழுவாக மாநில தலைமை நிர்வாகிகள் ஐவருடன் மாநில உபதலைவர்கள் சேலம் R. ஜெயராமன் அவர்களும் திண்டுக்கல் K.R.சுப்பிரமணியன் அவர்களும் இணைந்து செயல்பட இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

**18. ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரம் செய்திட நாம் எடுத்து வரும் சட்ட ரீதியான நடவடிக்கையுடன் கூடுதலாக இயக்கங்கள் மற்றும் நேரடி நடவடிக்கை (வேலை நிறுத்தம்) மேற்கொள்ள முடிவெடுத்திட தலைமை நிர்வாகிகளுக்கு இச்செயற்குழு முழு அதிகாரம் அளிக்கிறது.**

மாநில செயற்குழு முடிவுகளை அமல்படுத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிட ஆலோசனை நல்கிய தலைவர் முடிவுடையுடன் செயற்குழு இனிதே நிறைவுற்றது.

தோழமையுள்ள,

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

**மருத்துவ காப்பீடு - ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் / கருணைத் தொகை பெறுபவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் காப்பீடு தொடர்பான விழிப்புணர்வு வழங்கிட உத்தரவு**

**Tamil Nadu Generation and Distribution Corporation Limited**

Secretariat,
144, Anna Salai,
Chennai - 600 002.

**Memo. No. 61339/A18/A183/2019-3, dated : 29.01.2020**

**Sub :** TANGEDCO - Pension - New Health Insurance Scheme 2018 to the pensioners (including spouse)/family pensioners/exgratia beneficiaries w.e.f. 01.11.2018 - Certain instructions - Reiterated.

**Ref :** 1. (Per.) CMD TANGEDCO Proc. No. 191 (SB), dt. 20.10.2018
2. Memo. (Per) No. 22571/A18/A183/19-1 (SB) dt. 25.06.2019
3. Memo. (Per) No. 22572/A18/A183/19-1 (SB) dt. 06.07.2019
4. Memo. No. 47759/A18/A183/2019-1 (SB), dt. 13.12.2019

*****

In the Proceedings first cited, orders were issued implementing the New Health Insurance Scheme, 2018 to the Pensioners (Including Spouse)/Family Pensioners/Exgratia Beneficiaries of TANGEDCO through M/s United India Insurance Company Limited with effect from 1st November, 2018.

2. In the Memo, second cited, the Chief Internal Audit Officer/Audit Branch and the Superintending Engineers of certain Electricity Distribution Circles [Liaison Officers] were instructed to create awareness among the Pensioners/Family Pensioners/Exgratia Beneficiaries about the salient features of the New Health Insurance Scheme by conducting Awareness Programmes. Further, in the Memo. third cited, instructions were issued to the Liaison Officers to send the Health Insurance Identity Cards either by Courier or by RPAD to the addresses furnished by the pensioners/family pensioners and exgratia beneficiaries. The said instructions were reiterated - vide Memo. fourth cited.

3. It has been brought to the notice that the said instructions are not followed in several Circles/Offices/ It has also been brought to the notice that the Identity Cards issued by M/s. United

India Insurance Company Limited contain several mistakes/errors and the Pensionerss' Associations have requested to issue suitable instructions to the concerned Superintending Engineers (Liaison Officers) in this regard. The request of the Pensioners' Associations has been examined in detail and it has been decided to accept the same.

4. Accordingly, the Chief Internal Audit Officer/Audit Branch and the Superintending Engineers of certain Electricity Distribution Circles [Liaison Officer] are hereby instructed to conduct Awareness Programmes at District level, explaining the salient features of the New Health Insurance Scheme - 2018 to the Pensioners/Family Pensioners/Exgratia Beneficiaries on the date and time convenient to both Liaison Officers and District Coordinators, viz., representatives of MD India and to complete the process by 31.03.2020. The action taken report shall be sent to this office on completion of the said process immediately.

5. The Liaison Officers are also instructed to send the Health Insurance Identity Cards either by Courier or by RPAD to the addresses furnished by the pensioners/family pensioners and exgratia beneficiaries, adhering to the instructions already issued in the Memoranda second and third cited.

6. Further, the Liaison Officers are instructed to collect the representations from the pensioners seeking correctios/alterations in the Health Insurance Identity Cards and to send the same to the concerned offices of M/s United India Insurance Co. Ltd. every Friday, without giving room for any complaints.

7. The above instructions should be adhered to scrupulously and any deviation of any of the instructions shall be viewed seriously.

8. The receipt of this Memo., shall be acknowledged.

**S. VINEETH,**
Secretary (Full Addl. Charge)

## கடன் - வீடுகட்ட முன் பணம் வழங்குவது தொடர்பான உத்திரவு

## Tamil Nadu Generation and Distribution Corporation Limited

Secretariat Branch
144, Anna Salai,
Chennai - 2

**Memo. (Per) No. 1505/A7/A71/2019-2, dated : 08.01.2020**

***Sub*** : ***Loans & Advances - TANGEDCO - House Building Advance - Intial Advance - Allotted.***

***Ref*** : ***i) B.P. Ms. No. 341 (Adm) dated : 25.5.1981***
***ii) B.P.Ms. No. 8 (Adm) dated 8.1.1982***
***ii) B.P.Ms. No. 445 (Secretariat) dated : 23.8.1982***

In the Proceedings first and second cited, orders were isasued delegating powers to officers for sanction of House Building Advance and clarification were issued in the Proceedings third cited for fixing priority to the applications who applied for House Building Advance.

2. Fund allotment is being made to the sanctioning authoruities in four quarters during every financial year. The fund allotment were made based on the requirement intended by the sanctioning authorities in respect of each quarter.

3. In order to minimize the time duration between receipt of application and in according sanction to the applicants, within the quarter itself, it has been decided to allot a sum of Rs. 50,00,000/- (Rupees Fifty lakhs only) to the sanctioning authorities, as per Annexure-I towards initial advance for santion of House Building Advance, Subject to the following conditions:

i) to adhere with the instructions laid down in rule 9 of Rules ro Regulate the grant of advances to employees for Building etc., of houses, while dealing with the applications have to be complied with surupulously.

ii) accord sanction to the applicants and to release the first intalment for construction / plot cum construction / enlargement acategory.

iii) in respect of Ready Built Hose/Flat, fund should be released after obtaining the inspection report from the inspection authorities.

iv) if the said fund is exhausted, the sanctioning authorities shall intend for the remaining amount from this Branch and accord sanction to the applicants in the quarter itself.

v) the sanctioning authorities shall send the copy of sanction accorded/disbursal order in respect of construction/plot cum construction / enlargement category and the formal sanction / disbursement order along with inspection report in respect of Ready Built House / Flat should be furnished for each quarter.

vi) In respect of those sanctioning authorities, who does not receive applications from the applicants for grant of House Building Advance, the initial advance allotted shall be carried over to the next quarter likewise if unutilized quantum of fund should also be intimated to consolidate the tentative fund for the ensuing quantum. The unutilized amount shall be remitted back to Chief Financial Controller/General. Accounts Branch/TANGEDCO at end of each financial year without fail.

vii) The sanctioning authorities may also be instructed that the intial advance allotted should not be utilized other than sanction of House Building Advance.

viii) The authorities shall be responsible for timely submission of deposit of title deed in favour of Chairman cum Managing Director and excution of title Deed.

ix) Format Annexure II, III, IV shall be sent quarterly, without fail.

4. In respect of those sanctioning authorities, who are not allotted with initial advance as per Annexure-I shall intend for dunds as prescribed in Annexure- -V after receipt of applications if any, inrespect of their Circles/Offices.

5. The Sanctioning authorities are instructed to follow the conditions scrupulously and also informed that the other conditions prescribed in Rules to Regulate the Grant of Advances to TNEB Employees for Building, etc., Houses, Read with Tamil Nadu Electricity (Reorganization & Reforms) Transfer Scheme, 2010, for according House Building Advance remains unaltered.

**S. VINEETH**
Secretary (A/c)

## உதவி வரைவாளர் - நேரடி நியமனம் செய்திட வேண்டி நமது பெடரேஷனின் கடிதம்

பெறுநர்: 12.2.2020

**தலைவர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : TNEBEF - மாநில செயற்குழு தீர்மானம் - உதவி வரைவாளர் - நேரடி நியமனம் - தொடர்பாக.**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 750க்கு மேற்பட்ட உதவி வரைவாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. Monthly & Weekly Returns தயாரித்தல் DCW, Extension of supply and Inprovement Estimate தயாரித்தல், மின்வாரியத்திற்குட்பட்ட இடம் சம்மந்தப்பட்ட சான்றுகளை பாதுகாத்தல் முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு பதில் அளித்தல் போன்ற முக்கிய பணிகளின் அன்றாடம் SE மற்றும் EE அலுவலகப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேற்கண்ட பணிகள் யாவும் வரைவாளர் பணியிடங்கள் காலியாக உள்ளதால் பொறியாளர்கள் கூடுதலாக பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

உதவி வரைவாளர் நேரடி நியமனம் குறித்து வரைவாளர் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இது குறித்து வரைவாளர் சங்கத்தின் கருத்துரு அடங்கிய கடிதத்தினை தங்களின் மேலான பார்வைக்கு இணைத்துள்ளோம்.

எனவே தலைவர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து உதவி வரைவாளர் நேரடி நியமனம் செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

இணைப்பு : வரைவாளர் சங்க கடித நகல்

---

## Tamilnadu Electricity Board Draughtsmen Union

| **S. RAJAN** | **P. RANGANATHAN** | **R.M. SETHURAMAN** |
|---|---|---|
| *President* | *General Secretary* | *Treasurer* |

பெறுநர்:

**உயர்திரு தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை-02.

ஐயா,

**பொருள் : தமிழ்நாடு மின் வாரியத்தில் காலியாக உள்ள உதவி வரைவாளர்கள் (Assistant Draughtsman) பதவிகள் நிரப்பிட வேண்டுதல் - சார்பாக.**

தமிழ்நாடு மின் வாரியத்தில் வரைவாளர்கள் கோட்டம் மற்றும் வட்ட அலுவலகங்களில் தொழில்நுட்ப பணிகளை செவ்வனவே செய்து வருகின்றனர். மேலும் பொறியாளர்களுக்கு தொழில்நுட்ப பணிகளில் மிகவும் உதவிகரமாக செயல்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு மின்வாரிய ஆணை எண். BP (FB) No. 452, நாள்: 22.08.1983 மூலம் வரைவாளர் நார்ம்ஸ் (Norms) படி ஒப்பளிக்கப்பட்ட 259 உதவி வரைவாளயர்கள் பதவிகள் இருக்க வேண்டும். ஆனால், தற்போதைய நிலையில் 2 உதவி வரைவாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். சுமார் 250 உதவி வரைவாளர் பதவிகள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் காலியாக உள்ளது.

கடந்த 1995ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக 108 உதவி வரைவாளர்கள் பணியமர்த்தப்பட்டனர். அதன் பின்னர் 2017ஆம் ஆண்டு 50 உதவி வரைவாளர்கள் நேர்முகத் தேர்வு மூலம் பணியமர்த்தப்பட்டனர். அவர்களும் வரைவாளராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகின்றனர். தற்போது மின் வாரியத்தில் உதவி வரைவாளர்கள், வரைவாளர்கள் மேற்கொள்ளும் பணிகள் பற்றிய விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்ட இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் அனுமதிக்கப்பட்ட 1030 வரைவாளர்கள் பதவிகளில் 80% பதவிகள் பல ஆண்டுகளாக காலியாக உள்ளது. இதில் அடிப்படை பதவியான உதவி வரைவாளர்கள் பதவிகள் நிரப்பப்படாததால் வரைவாளர் மற்றும் முதுநிலை வரைவாளர், தலைமை வரைவாளர் பதவிகள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்படாமல் உள்ளது. இதனால் கோட்டம் மற்றும் வட்ட அலுவலகங்களில் தொழில்நுட்ப பணிகள் செய்ய தொய்வு நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசின் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் (ITI) Draughtsman (Civil) & (Mechanical) பயிற்சி முடித்து ஏராளமான ஏழை இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து பல ஆண்டுகளாக காத்திருக்கின்றனர். அவர்களின் வாழ்வில் ஒளியேற்றவும் மின் வாரிய வட்டம் மற்றும் கோட்ட அலுவலகங்களில் தொழில்நுட்ப பணிகள் தொய்வின்றி நடைபெறவும் மேற்படி காலியாக உள்ள 250 உதவி வரைவாளர்கள் பதவிகளை நேரடி நியமனம் மூலம் பணியமர்த்திட தங்களின் மேலான ஆணை வழங்கி, கருணை உள்ளத்துடன் பரிசீலனை செய்ய வேண்டுமென பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

உதவி வரைவாளர் / வரைவாளர் பணிகள் குறித்த விபரங்கள் இத்துடன் தங்களது கனிவான பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

1. Preparation of drawings in which is required for all types of works.
2. Submisasion of Weekly/ Monthly returns data in respect of Division Office / Central Office for which the particulars are collected from Division / Subdivision / Sections offices under the control of Executive Engineers and Superintending Engineer's Office in all the Distribution Circles and the same are submitted to Regional Office of Chief Engineer / Distribution, Head Quarters, Chennai on time.
3. Preparation and Scruitinization of Various types Estimates such as DCW Improvements, Extension of Supply, Dismantling and temporary Supply of Works as per the cost data and Check it properly.

4. Preparation of K2 Agreemtns, various procurements and purchase orders and Labour contract in field works in respect of Executive Engineers and Superintending Engineer's Offices, Head Quarters in all the Distribution Circles.
5. Maintenance of Lands and buildings records pertaining to the Board.
6. The correspondence are being maintained such as Breakdowns, Failure of Lines, Theft of Materials and conductors, Accident reports.
7. Review Meeting correspondence being maintained.
8. Allotment of materials as per the target fixed by the Head Quarter in respect of Agriculture, Industrials, Domestic, OHT, Street Lights and Commercial etc.,
9. Progress of Theft of Energy report coordinate with All Divisions.
10. Intimation of mass raid and reports are being collected.
11. Ex-Servicemen Report and Attendance entry is made in Intra-Net.
12. Updating of Court cases and Lok Adhalat, Temporary advance memo approval.
13. Floating of tenders such as Stationary and Vehicles, maintenance of Registration of Contracts.
14. Register Maintenance for Failure of Distribution Transformer and allotment.
15. T&P Estimate Sanction, Dirty Oil reclamation approval, Sanction for Defective Meters. Work orders issued and scheme works.
16. Grievance petitions pertaining to Agriculture in respect of Collectorate.
17. Various Grievance Petitions Registers being maintained such as SE Grievance petitions, Consumer Complaint Monitoring system, Bard vehicle LLB, Temporary Advance etc.,
18. Right to Information Act Regisater, and allied correspondences.
19. Sanction of various types of schemes and floating of tenders.
20. Sanction of Survey Report Proposals for T&Ps.
21. Maintenance all Substations records allied corresponce.
22. Preparation of Drawings for the 11/33/110/230KV cables laying in Chennai Metro Areas identifying and locating the cables where breakdown faults in the affected areas immediately the rectification works will be carried out by the field staff and up date drawings then there.
23. Maintenance of rainfall details for the prepaeretion of Hydro schemes in the investigation wing.
24. Publication of Tender Notices Other notifcation in dailies and Sanction of Advertisement Charges bills in the Civil Design wing for both TANGEDCO and TANTRANSCO.
25. All types of technical works are being assisted by the DRAUGHTSMAN TO ENGINEERS.

நன்றி.

இணைப்பு -1

நகல் :

**உயர்திரு இணை மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை-600 002.

**உயர்திரு தலைமை பொறியாளர் பணியமைப்பு** அவர்கள்

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை-600 002.

தங்கள் உண்மையுள்ள

**(P. ரெங்கநாதன்)**

பொதுச்செயலாளர்

தமிழ்நாடு மின்வாரிய வரைவாளர் சங்கம்

## மின்சார வாரியத்தின் சீரமைப்பு மற்றும் முத்தரப்பு ஒப்பந்தம் தொடர்பாக வாரியத்திற்கு கடிதம்

பெறுநர்: நாள் : 12.02.2020

**தலைவர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : மின்சார வாரியம் - சீரமைப்பு - முத்தரப்பு ஒப்பந்தம் - தொடர்பாக.**
**பார்வை : (Per) CMD TANGEDCO Proceedings No. 440 Dt : 07.12.2019**

1. தமிழ்நாடு மின்சார வாரிய சீரமைப்புக்கான முத்தரப்பு ஒப்பந்தம் செய்வது தொடர்பான கருத்துருவின் மேல் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதில் **ஓய்வு பெற்றோர் (Retired Association) சார்பாக கருத்துகளை கேட்டறிய ஓய்வு பெற்றோர் அமைப்புகளுக்கும்** நகல் அனுப்பி கருத்தறிந்திட வேண்டுகிறோம்.

2. முத்தரப்பு ஒப்பந்தம் தொடர்பான ஆலோசனைக் கூட்டங்கள் தொழிற்சங்கங்களோடு **செயலகப் பிரிவு வழியாக நடைபெறுவதே சரியாக அமைந்திட ஏதுவாகும்** இதர ஒப்பந்தங்கள் குறித்த பேச்சுவார்த்தை யாவுமே செயலகப்பிரிவு வழியே நடைபெறுகிறது என்பதை கருத்தில் கொண்டிட வேண்டுகிறோம்.

எனவே, இக்கமிட்டிக்கான ஒருங்கிணைப்பாளாரக Secretary / TANGEDCO அவர்களை நியமித்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## TNEBEF மாநில செயற்குழு தீர்மானம் - இளநிலை பொறியாளர் II மற்றும் இளநிலை பொறியாளர் I ம் நிலை - நீதிமன்ற வழக்குகள் குறித்து வாரியத்திற்கு கடிதம்

நாள் : 12.02.2020

பெறுநர்:

**தலைவர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : இளநிலை பொறியாளர் IIம் நிலை - பதவி உயர்வு - இளநிலை பொறியாளர் Iம் நிலை - தொடர்பாக...**

இளநிலை பொறியாளர் IIம் நிலையில் பணியாற்றுபவர்களின் முதன்மைப் பட்டியலில் திருத்தம் வேண்டியும் இதனடிப்படையில் இளநிலை பொறியாளர் Iம் நிலை பதவி உயர்வு அளித்திட வேண்டியும் நீதிமன்ற வழக்குகள் தனி நபர்களாலும் தொழிற் சங்கங்களாலும் தொடரப்பட்டு குறிப்பிட்ட உத்தரவுகள் வரப்பட்டுள்ளன.

வழக்கு தொடுத்த பணியாளர்கள் மற்றும் சங்கங்களை தவிர்த்து ஏனைய சங்கங்களிலும் இளநிலை பொறியாளர் IIம் நிலையில் பணியாற்றுபவர்கள் உறுப்பினராக உள்ளார்கள். ஆதலால் நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்திட காலம் தாழ்த்தாது உடன் நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம் (அல்லது) இது குறித்து தொழிற்சங்கங்களோடு பிரத்யோகமான பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு கொண்டு வர வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

## தமிழ்நாடு மின்சார வாரியம் - பணி விதிகள் - திருத்தம் தொடர்பாக நமது பெடரேஷனின் கடிதம்

பெறுநர்: நாள் : 12.02.2020

**தலைவர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : தமிழ்நாடு மின்சார வாரியம் - பணி விதிகள் - திருத்தம் - தொடர்பாக.**

தமிழ்நாடு மின்சார வாரிய பணி விதிகளில் ஏற்கனவே உள்ளதை மாற்ற வேண்டுமெனில் உரிய நேரத்தில் 9A நோட்டீஸ் தந்து தொழிற்சங்கங்களோடு பேசி முடிவுக்கு வரவேண்டும்.

தற்சமயம் விதிகளில் மாற்றம் வாரியம் தன்னிச்சையாக முடிவு செய்வதாக தெரிய வருகிறது.

குறிப்பாக இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் செய்வதற்குண்டான பணிகளில் குறைந்தது மூன்று வருடம் இளநிலை உதவியாளராகவே பணி செய்துதான் பதவி உயர்வுக்கு செல்ல வேண்டும் என பணி விதிகளில் திருத்தம் மேற்கொள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிகிறது.

தலைவர் அவர்கள் தகுந்த உத்தரவிட்டு இதுகுறித்து வாரியம் 9A நோட்டீஸ் அளித்து தொழிற்சங்கங்களோடு பேசி முடிவெடுக்க வேண்டுமென தலைவர் அவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

## TNEBEF மாநில செயற்குழு தீர்மானம் - தட்டச்சர் - நேரடி நியமனம் தொடர்பாக நமது பெடரேஷனின் கடிதம்

பெறுநர்: நாள் : 12.02.2020

**தலைவர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : TNEBEF - மாநில செயற்குழு தீர்மானம் - தட்டச்சர் - நேரடி நியமனம் - தொடர்பாக.**

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகம் மற்றும் மின்வட்டங்களில் தட்டச்சர் பணி காலியிடங்களாகவே உள்ளன.

மின்சார வாரிய தலைமை அலுவலக நிர்வாக பிரிவில் கண்காணிப்பாளர்களே தட்டச்சு செய்து கோர்ப்பு அனுப்பிட வேண்டியுள்ள நிலையும் காண முடிகிறது.

Administrative Branch, Secretariate Branch, Technical Branch, Accounts Branch, Audit Branch மற்றும் மின்வட்டங்களில் உள்ள நிர்வாகப் பணிகள் போன்ற முக்கியமான இடங்களில் தட்டச்சு பணிக்கு தட்டச்சர்கள் இல்லாததால் பணிகள் தேங்கி கிடக்கின்றன.

தலைவர் அவர்கள் தகுந்த உத்தரவிட்டு தட்டச்சர் காலியிடங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொண்டு நேரடி நியமனம் செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## நினைவிற்கு — தண்டனைக் காலத்தில் விருப்ப மாறுதல் விண்ணப்பங்களை ஏற்கச் செய்யும் உத்தரவு

### Tamil Nadu Generation and Distribution corporation Limited

Secretariat Branch,
144, Anna Salai,
Chennai - 600 002.

**Memo (Per) No. 5924/A18/A181/2016-13, dated : 07.12.2017**

**Sub** : TANGEDCO - ESTABLISHMENT - Consideration of request transfer application urrency of punishment - Instructions - Issued.

****

It has been brought to the notice that the request transfer application of the employees, who are undergoing punishment are not being considered by the competent authorities. Representation has been received to issue a common order in this regard. The same has been examined in detail and decided to issue necessary instructions.

2. On completion of the disciplinary proceedings and on issue of final orders thereon, necessary entries would be made in the Service Register and the currency of punishment commenced would also reflect in the Service Register as well as in the other records. Even on transfer to the other stations, the punishment ordered will definitely continue till its completion.

3. Therefore, all the competent authorities are hereby instructed that the request transfer application during the currency of the punishment shall be considered.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**R. BALAJI,**
Secretary

## தமிழ்நாடு மின்சார வாரிய அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பின் முடிவினை தெரிவித்து வாரியத்திற்குக் கடிதம்

பெறுநர்: 30.01.2020

**தலைமை பொறியாளர் பணியமைப்பு** அவர்கள்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 144, மின்வாரிய வளாகம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.

அன்புடையீர்,

**பொருள் :** மின்வாரிய சீரமைப்பு செய்வதற்குரிய முத்தரப்பு ஒப்பந்தம் குறித்து கருத்துரு கேட்டது - சம்மந்தமாக.

**பார்வை :** **CE/P Lr. No. 002541/30/G.43/G.432/2020, dt : 13.01.2020**

தமிழ்நாடு மின்சார வாரியத்தை சீரமைப்பு குறித்து முத்தரப்பு ஒப்பந்தம் காண்பதற்கு பார்வையில் கண்ட வாரிய கடிதத்தின் படி சில கருத்துருக்களை வழங்கும்படி தொழிற்சங்கங்களை வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது. இக்கடிதத்தை பெற்றுக் கொண்ட அனைத்து தொழிற்சங்கங்களும் ஒருங்கிணைந்து தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சிங்கார. இரத்தினசபாபதி அவர்களின் தலைமையில் இன்னறு 30.01.2020 காலை 11.30 மணியளவில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து தொழிற்சங்கங்களின் பொறுப்பாளர்களும் தெரிவித்த ஆலோசனையின் அடிப்படையில் கீழ்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை தங்களின் மேலானன கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

1. பார்வையில் கண்ட கடிதத்தின் படி வாரியத்தின் சார்பாக தெரிவிக்கப்பட்ட முத்தரப்பு ஒப்பந்த சரத்து திருத்த கருத்துருவினை தொழிலாளர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் பாதிக்கும்

வகையில் இருப்பதால் இத்திருத்தங்களை ஏற்றுக் கொள்வதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளஞது (5/16 மற்றும் 5/22 நீங்கலாக) என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

2. மேற்குறித்த வாரிய கடிதத்தின் படி கோரியுள்ள கருத்துரு குறித்து ஆட்சேபனை இருப்பதால் இரண்டு மாத கால அவகாசத்திற்குள் கருத்துக்களை தெரிவிக்கிறோம்.

3. வாரியம் அளித்துள்ள கருத்துரு மீது அனைத்து தொழிற்சங்கங்களையும் அழைத்து தொடர்ச்சியான பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

1. சம்மேளனம்

2. கணக்காயர்கள் களத் தொழிலாளர் சங்கம்

3. தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

4. தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (CITU)

6. மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்

7. ஐ.என்டி.யு.சி (சேவியர்)

8. ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

9. பொறியாளர் சங்கம்

10. மின்வாரிய காங்கிரஸ் NLO

11. தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்

12. பொறியாளர் கழகம்

13. நிதி மற்றும் கணக்கதிரிகாள் அமைப்பு

15. த.மி.வா.கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

16. TNEB Dr. அம்பேத்கர் எம்ப்ளாயீஸ்

17. பொறியாளர் யூனியன்

18. TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

19. தமிழ்நாடு மின்சார வாரிய ஊர்தி ஓட்டுவோர் சங்கம்

20. தமிழ்நாடு மின்வாரிய பண்டகசாலை பணியாளர் சங்கம்

21. பவர் இன்ஜினியர்ஸ் அசோசியேஷன்

## மின்வாரிய சீரமைப்பு முத்தரப்பு ஒப்பந்த வரைவில் திருத்தங்கள் செய்திட நிர்வாகம் வழங்கியுள்ள முன்மொழிவு

**Tamil Nadu Generation and Distribution Corporation Limited**
(Administrative Branch)

From
Er. R. Krishnamoorthy, B.E.,
Chief Engineer/Personnel,
8th Floor, N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai, Chennai - 600 002.

To
The 18 Unions / Associations,
TANGEDCO

**Lr.No. 002541/30/G.43/G432/2020, dated : 13.01.2020**

Sir,

**Sub : Restructuring of TNEB - Remarks of the Labour Department on the Dragt Tripartite Agreement - to be communicated to all Unions - Associations - Reg.**

**Ref : CE/PLG/RC/SE/PLG/EE/GPII/AEE2/ F. Restructuring/D.No. 04/ 2020, dt: 07.01.2020**

A copy of remarks of the Labour Department on the Draft Tripartite Agreement is enclosed herewith as received vide reference cited.

All the addressed Unions/Associations are requested to send their remakrs on the above Draft Tripartite Agreement within 15 days from the date of receipt of this letter for further action in this regard. If there is no response on their part within the stipulated date, it will be constructed that they have **"NIL"** remakrs.

Yours faithfully,
**(K. Muthukrishnan)**
Personnel Officer/Implementation
for Chief Engineer / Personnel

| Tripartite Agreement sent to Government for approval | COL Remarks |
|---|---|
| 5(3)- In view of re-organization of the Board into TNEB Limited (as holding company) and two or as many subsidiary companies like Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) and Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) as a seperate Corporate entitles, the State Government and the Successor entities hereby undertake / **guarantee** that there shall be no retrenchment of existing employees on account of such restructuring and their status/service conditions shall not in any way be less favourable than those which would have been applicable to them if there had been no such re-organization and the transfer scheme. Any employee rendered surplus | Change made by Finance Department may be agreed to delete the highlighted word **"Guarantee"** |

| | |
|---|---|
| through a mutually agreed process of appropriate rationalization shall be redeployed. | |
| **5(7)** The parties, of the first and second part **unconditionally** gurantee the payment of Pension, Family Pension, Retirement / Death benefits such as gratuity, encashment of earned leave and the existing benefits including GPF/CPF and periodical Dearness Allowance Relief and all other terminal / applicable benefits that are in force as on the date of signing of the agreement to all existing pensioners / family pensioners / other eligible persons. | Change made by Finance Depart ment may be agreed. (i.e.) to delete the highlighted word **"unconditionally"** |
| **5(9)** It is agreed by the parties of First and Second Part herein to consider creation of a seperate fund to meet the pension and other liabilities to the existing pensioners and pension and other terminal benefits of the existing employees of the TNEB and the successor entities. | Since sufficient provisions have been mande in clause 5(8) & 5(12) to protect the interest of the pensioners no need to create a "Seperate fund" meet the pension and other terminal benefits. Hence, Clause 5(9) may be deleted. |
| **5(10)** All the existing welfare measures like the scheme for compassionate appointment medical reimbursement, present medical insurance till tis validity period and thereafter by any other suitable scheme / insurance, educational loan, health fund, HBA, Conveyance advance, marriage advance, festival advance or any other existing loans and advances, **shall be** continued generally following the schemes introduced / followed by the State Government to the Government servant as has been done earlier. | Modification made by Finance Department maby be accepted. To modify the highlighted portion as, shall be continued. The schemes introduced/ followed by the State Government to the Government Servant will be followed as has been done earlier subject to the approval of the respective company's Board. |
| **5(12)** The existing welfare benefits to the pensioners, family pensioners and existing employees subject to modifications, that may be brought forth by the State Government, **Shall continue.** All obligations in respect of payment of pension, family pension and other retirement nebefits including provident fund, superannuation pension, gratutity and encashment of leave, etc. to the employees already retired and to be retired from the services of the Board shall continue. The benefits, which may be announced by the Government of Tamil Nadu to their pensioners from time to time, shall be implemented without any modifications by to "the successor corporatie entitles" as was hitherto done by the Board. | Modifications mady by Finance Department may be accepted. The existing welfare benefits to the pensioners, family pensioners and existing employees subject to modifications, that may be brought forth by the State Government, shall continue **Subjecto to the approval of the respective Company's Board.** |

| | |
|---|---|
| **5(16)** During the transition period, i.e., from deputation to permanent absorption, the existing employees of the Board shall be allowed **to exercise their preferred option** and in case of any grievances, a "grievance handling committee" shall be formed by the TNEB Ltd to readers the employees grievances on such absorption. Seperate Committees shall also have representation from TANTRANSCO and TANGEDCO. Any representation of the Unions on behalf of the aggrived employee (s) shall be given due regard. If the Grievance Handling Committee found that a category/ section of employee is / are adversely affected, such category section of employees may be allowed to exercise one more option subject to administrative exigencies. | Industrial Dispute At 1947 Provides (Grievance Committee) uner Sec. 9C. It is obligatory on the part of Employer to form grievance handling committee under the said Act. Hence this clause need not be deleted. |
| **5(22)** The successor entitles may introduce a new set of rules, regulations, certified standing order etc., **in consultation with the Trade Unions** which will be effect from the date following the date of completion transition period which shall be within the ambit of the first provisino to section 133 (2) of the Electricity Act 2003. Till such introduction, the rules, regulations, certified standing orders etc., in force on the date of this agreement shall continue to be in force. Even legitimate activity or functions of TNEB or successor entitles in respect of existing employees including those contained in the settlements on work norms shall not be modified without following the procedure laid down in relevant law. | The words **"and Board** may be added after the words **"In consultation with the trade union".** |

**Other Remarks**

As far as the remarks of the unions are concerned some of the unions have pointed out that the Tripartite agreement should protect the rights and welfare of the employees and to be guranteed by the Government and they should have been consulted before taking any decision which involves duties and responsibilities, rights and welfare of the employees and pensioners. They also raised that the benefits/orders must be implemented even after unbundling and the seniority to be maintained as in where basis. Some unions requested to convene a meeting to make clauses in the draft agreement still more enhanced and guranteed.

Hence, it would be appropriate to hold meeting with trade union / Associations to clear their doubts and to obtain their Cooperation for the successful implementation of the Tripartite settlement.

For Commissioner of Labour
22/07/2019

## 1.1.2004 முதல் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் மத்திய அரசில் பணிபுரிவோருக்கு DGRG அனுமதித்து மத்திய அரசின் கீழ் இயங்கும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியர் நலன் காக்கும் துறையின் உத்தரவு

No. 7/5/2012/P&PW (F)/B

**Ministry of Personnel, Public Grievances and Pensions**
**Department of Pension and Pensioners Welfare**

Lok Nayak Bhavan, Khan Market,
New Delhi - 110 003. Dated the 26 August 2016

**OFFICE MEMORANDUM**

***Subject : Extension of benefits of 'Retirement Gratuity and Death Gratuity' to the Central Government employees covered by new Defined Contribution Pension System (National Pension System) - regarding.***

The undersigned is directed to say that the pension of the Government servants appointed on or after 1.1.2004 is regulated by the new Defined Contribution Pension System (known as National Pension System), notified by the Ministry of Finance (Department of Economic Affairs) vide their O.M. No. 5/7/2003-ECB & PR dated 22.12.2003. Orders were issued for payment of gratuity on provisional basis in respect of employees covered under National Pension System on their retirement from Government service on invalidation of death in service, vide this Department's OM No. 38/41/2006-P&PW (A) dated 5.5.2009.

2. The issue of grant of gratuity in respect of government employees covered by the National Pension System has been under consideration of the Government. It has been decided that the government employees covered by Nationa Pension System shall be eligible for benefit of 'Retirement gratuity and Death gratuity' on the same terms and conditions. as are applicable to employees covered by Central Civil Service (Pension) Rule, 1972.

3. There orders issue with the concurrence of Ministry of Finance. Department of Expenditure vide theirt I.D. Note No. 1 (4)/EV/2006-11 dated : 29.07.2016.

4. In their application to the persons belonging to the Indian Audit and Accounts Department. these orders issue after consultation with Comptroller and Auditor General of India.

5. The orders will be applicable to those Central Civil Government employees who joined Government service on or after 1.1.2004 and are covered by National Pension System and will take effect from the same fate i.e. 1.1.2004.

**(Harjit Singh)**
Director (Pension Policy)

## உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் ஒரே அமர்வில் பி.காம். படித்த கல்வித் தகுதிக்கு ஊக்கத் தொகை மற்றும் பதவி உயர்வு அளிக்க இயலாதென கூறும் வாரிய உத்தரவு

Secretariat Branch
144, Anna Salai,
Chennai - 600 002

**Memo. (Per.) No. 48852/A3/A32/2018-9, Dated : 22.01.2020**

***Sub : TANGEDCO - One sitting B.Com degree conducted by Osmania University - Not eligible for Incentive increment/Promotion - Clarification - Issued.***

***Ref : 1. Board's Proceedings (Ms) No. 750 (SB) dated : 3.04.1979***

***2. From the University Grants Commission, New Delhi Letter No. 7-14/2018 (CPP-II), dated : 25.02.2019***

****

A point of clarification has arisen whether one sitting B.Com degree conducted by Osmania University is valid for sanction of increment and promition.

2. The University Grants Commission has been consulted with regard to one sitting B.Com degree conducted by Osmania University is valid. The clarifications received from the above authority has been examined in detail and it has been decided that one sitting B.Com degree is not equivalent to regular three year B.Com degree.

3. Accordingly, it is hereby ordered that one sitting B.Com degree course conducted by Osmania University shall not be taken into account for grant of incentive increment/promotion.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**S. VINEETH**
Secretary (A/c)

## அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துகள்

தோழியர்களே!

வணக்கம். தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சார்பாக மகளிர் தின விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

இடம் : **கோயம்புத்தூர் மலையாளி சமாஜம்**
9வது தெரு விரிவாக்கம்,
100 அடி சாலை, காந்திபுரம்,
கோயம்புத்தூர் - 12.

நாள் : மார்ச் 8 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மதியம் 2.00 மணி

தோழியர்கள் கலந்து கொண்டு மகளிர் தினத்தை சிறப்பிக்க அன்போடு அழைக்கிறோம்.

**M. பாரதி,** மாநில செயலாளர், மகளிர் அணி TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்




**சென்ற இதழ் பகுதி 6ன் தொடர்ச்சி**

**அரசுக்கு எதிரான குற்றங்கள் பற்றி**

**பிரிவு - 124A ( Section & 124A )**

**குற்றம் :** ஆட்சித் துரோகம்.

**தண்டனை :**

ஆயுள் தண்டனையும், அபராதமும், அல்லது 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அபராதமும் அல்லது அபராதம் மட்டும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விட இயலாதது, அமர்வு நீதிமன்ற எல்லைக்குள்பட்டது.

**பிரிவு - 125 (Section & 125 )**

**குற்றம் :** இந்திய அரசுடன் இணக்கமாக உள்ள அல்லது அமைதியுறவு கொண்டுள்ள ஆசிய நாட்டிற் கெதிராக போர் தொடுத்தல் அல்லது போர் தொடுக்க முயற்சி செய்தல் அல்லது போர் தொடுக்கத் தூண்டுதல் அல்லது அதற்கு உடந்தையாக இருத்தல் போன்ற செயல்களைச் செய்தல்.

**தண்டனை :**

ஆயுள் தண்டனையும், அபராதமும், அல்லது 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அபராதமும் அல்லது அபராதம் மட்டும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விட இயலாதது, அமர்வு நீதிமன்ற எல்லைக்குள்பட்டது.

**பிரிவு - 126 (Section & 126 )**

**குற்றம் :** இந்திய அரசுடன் இணக்கமாகவுள்ள, அல்லது அமைதி உறவு கொண்டுள்ள அரசின் மண்டலங்களில் (கொள்ளையடித்தல் ) சூறையாடும் அல்லது சூறையாட முன்னேற்பாடுகள் செய்தல்.

**தண்டனை :**

7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அபராதமும், சூறையாடலால் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் தண்ட இழப்பீடிற்கு உள்ளாக்கப்படுதலும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விடக்கூடாதது, அமர்வு நீதி மன்ற எல்லைக்குள்பட்டது.

### பிரிவு - 127 (Section & 127 )

**குற்றம் :** பிரிவுகள் 125 126 ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள குற்றங்களில் எதையேனும் செய்ததால் கிடைத்த சொத்து என்று தெரிந்தே, அதில் எதையேனும் பெற்றுக்கொள்ளுதல்.

**தண்டனை :**

7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படலாம். அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட சொத்துக்களை தண்ட இழப்பீடிற்கு உள்ளாக்குதலும் வேண்டும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, ஜாமீனில் விடக்கூடாதது, அமர்வு நீதிமன்ற எல்லைக்குள்பட்டது.

### பிரிவு - 128 (Section & 128)

**குற்றம்:** பொது ஊழியர் தம்முடைய காவலில் உள்ள அரசுக்கைதி அல்லது போர்க்கைதியைத் தப்பிச் செல்ல தன்னிச்சையாக அனுமதித்தல்.

**தண்டனை :**

ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விட இயலாதது, அமர்வு நீதிமன்ற எல்லைக்குள்பட்டது.

### பிரிவு - 129 (Section & 129)

**குற்றம் :** பொது ஊழியர் தம்முடைய காவலில் உள்ள அரசுக்கைதி அல்லது போர்க்கைதியை கவனமின்றித் தப்பிச் செல்லவிடுதல்.

**தண்டனை :**

3 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடியது. முதலாவது வகுப்பு நடுவர் மன்ற எல்லைக்குள்பட்டது.

### பிரிவு - 130 (Section & 130)

ஒரு பொது ஊழியர் அரசுக்கைதி அல்லது போர்க்கைதி எவரையேனும் சட்டப்பூர்வமான பாதுகாப்பினின்றும் தப்பிச் செல்ல அறிந்தே உதவி செய்தல் அல்லது தப்பிச் செல்ல துணை புரிதல் அல்லது அத்தகைய கைதியை மீட்க முயற்சி செய்தல். அல்லது சட்டப்படியான பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்ற அத்தகைய கைதிக்குப் புகலிடம் அளித்தல். அல்லது கைதியை மறைத்து வைத்தல். அல்லது அந்தக் கைதியை மீண்டும் பிடிப்பதை எவ்வகையிலும் தடைப்படுத்த முனைதல் அல்லது முயற்சி செய்தல்.

**தண்டனை :**

ஆயுள்தண்டனை அல்லது 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், அபராதமும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக் கூடியது, பிணையில் விட இயலாதது, அமர்வு நீதிமன்ற எல்லைக்குள்பட்டது.

## அத்தியாயம் 7

## (இராணுவம், கப்பல்படை விமானப்படை)

## முப்படைகள் தொடர்பான குற்றங்கள் பற்றி

### பிரிவு - 131 (Section & 131)

**குற்றம் :** படை வீரர்களிடையே கலகத்தைத் தூண்டுதல், அல்லது முப்படையில் ஏதேனும் ஒரு படை வீரரைப் பணியிலிருந்து விலகுமாறு திசைதிருப்பி தீயவழிக்குத் தூண்டுதல்.

கலகம் என்பது - கூட்டாகக் கீழ்படிய மறுத்தல், அல்லது அத்தகைய கலகங்களில் அரசுக்கு எதிராகவோ, நிர்வாகிகளுக்கு எதிராகவோ செயல்படுதலும் ஆகும்.

**தண்டனை :**

ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் சிறைவைப்பு மற்றும் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விட இயலாதது, அமர்வு நீதிமன்ற எல்லைக்குள்பட்டது.

### பிரிவு - 132 (Section & 132)

**குற்றம் :** படைவீரர்களின் கலகத்திற்கு உடந்தையாக இருத்தல். கலகம் அதன் காரணமாக ஏற்படுமானால்.

**தண்டனை :**

மரண அல்லது ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விட இயலாதது, அமர்வு நீதிமன்ற எல்லைக்குள்பட்டது.

### பிரிவு - 133 (Section & 133)

**குற்றம் :** இராணுவ வீரர், கப்பற்படை வீரர் அல்லது விமானப்படை வீரர் ஒருவர் தான் பணியிலிருக்கும் போது தனது உயரதிகாரியைத் தாக்குவதற்குத் தூண்டுதல் அல்லது உடந்தையாக இருத்தல்.

**தண்டனை :**

3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விட இயலாதது, முதல் வகுப்பு நடுவர் மன்ற எல்லைக்குள்பட்டது.

### பிரிவு - 134 (Section & 134)

**குற்றம் :** பிரிவு 133ல் விவரிக்கப்பட்டுள்ளபடித் தூண்டுதல் செய்ததன்படி தாக்குதல் செய்யப் பட்டிருந்தால்.

**தண்டனை :**

7 ஆண்டுகள் சிறைவைப்பும் அபராதமும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விட இயலாதது, முதல் வகுப்பு நடுவர் மன்ற எல்லைக்குள்பட்டது.

### பிரிவு - 135 (Section & 135)

அலுவலர், தரைப்படை வீரர், கடற்படை வீரர் அல்லது வான்படை வீரர் ஒருவர் தன் கடமையை விட்டு ஓடுவதற்கு உடந்தையாக இருத்தல்.

**தண்டனை :**

2 ஆண்டுகள் சிறைவைப்பு அல்லது அபராதம் அல்லது இரண்டுமே சேர்த்து.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விடக்கூடியது, எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடத்தகுந்தது.

**பிரிவு - 136 (Section & 136)**

**குற்றம் :** 135ல் குறிப்பிட்டுள்ளபடி தம் பொறுப்பை விட்டு ஓடுபவருக்குத் தெரிந்தே புகலிடம் அளித்தல்.

**தண்டனை :**

2 ஆண்டுகள் சிறைவைப்பு அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து.

தனது கணவருக்கு, மனைவி அளிக்கும் புகலிடம் இந்தப் பிரிவில் சேர்க்கப்படவில்லை.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விடக்கூடியது, எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடத் தகுந்தது.

**பிரிவு - 137 (Section & 137)**

**குற்றம் :** கடமையிலிருந்து தப்பியோடிய நபரை வியாபாரக் கப்பலில் அதன் முதல்வர் அல்லது பொறுப்பாளரின் கவனக் குறைவால் மறைத்து வைத்தல்.

**தண்டனை :**

ரூபாய் 500/-அபராதம்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடாதது, பிணையில் விடத்தக்கது, எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடத் தகுந்தது.

**பிரிவு - 138 (Section & 138)**

**குற்றம் :** அலுவலர், இராணுவ, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர் ஒருவர் தம் பணியில் கீழ்ப்படிய மறுத்த செய்கைக்கு உடந்தையாக இருத்தல், தூண்டுதல் காரணமாக கீழ்ப்படிய மறுத்த குற்றம் செய்யப்படுமானால்.

**தண்டனை :**

6 மாதங்கள் சிறை தண்டனை, அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விட இயலாதது, எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடத் தகுந்தது.

**பிரிவு - 139 (Section & 139)**

தரைப்படைச்சட்டம், 1950ஆம் ஆண்டு தரைப்படைச் சட்டம், கடற்கரைக் கட்டுப்பாட்டுச் சட்டம், 1934ஆம் ஆண்டு இந்தியக் கடற்படை ( கட்டுப்பாட்டுச் ) சட்டம், வான்படைச் சட்டம் அல்லது 1950 ஆம் ஆண்டு வான்படைச் சட்டம் இவற்றில் எதற்கேனும் உட்பட்டுள்ள எவரும், இந்த அத்தியாயத்தில் இலக்கணங்கூறப்பட்ட குற்றங்கள் எதற்கும் இச்சட்டத்தின்படி தண்டனைக்கு உட்பட்டவர் ஆகார்.

**பிரிவு - 140 (Section & 140)**

**குற்றம் :** இராணுவ, கடற்படை மற்றும் விமானப்படை வீரரால் பயன்படுத்தப்படும் சிறப்பு உடுப்பு மற்றும் அடையாளச் சின்னங்களை தொடர்பற்ற நபர்கள் எடுத்துச் செல்வதும், அணிவதும் குற்றமாகும்.

**தண்டனை :**

3 மாதங்கள் சிறைவைப்பு அல்லது ரூபாய் 500/- வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து வழங்க முடியும்.

மேல் விவரங்கள் : கைது செய்யக்கூடியது, பிணையில் விடக்கூடியது, எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடத் தகுந்தது.

***(தொடரும்)***

## ஊதிய ஏற்றத் தாழ்வுகளை களைந்திட விண்ணப்பிக்கும் முறையும், விண்ணப்ப படிவமும்

**Tamil Nadu Generation and Distribution Corporation Limited**

**SECRETARIAT BRANCH**
144, Anna Salai
Chennai - 2

**Memo. (Per) No. 56545/A4/A41/2019-1, dated : 22.01.2020**

**Sub** : TANGEDCO - Rectification of pay anomaly - Application and Format to be followed - Instructions - Issued.

******

Of late, it has been noticed that the particulars which are furnished by the Chief Engineer's/ Superintending Engineer's regarding the service details and pay drawn particulars are not sufficient to complete and justify the pay anomaly. The pay fixations made to the senior and junior are sometimes found erroneous on verification of the Service Books of the individuals. Moreover, , the authenticated copy of seniority list is also not furnished by them. In some cases, seniority numbers with reference to temporary promotions are furnished, which cannot be taken into account since temporary promotions shall not confer any rights on the individuals and they are not eligible for stepping up of pay on par with Junior. In some cases, the pay drawn particulars furnished in the comparative statement are contrary to the entries made in the Service Book of both senior and Junior. Further, they are not specifying the rule under which the pay anomaly was rectified.

2) Hence it is considered that it is necessary to issue instrctions and to prescribe Application and Format so as to verify the correctness of pay anomaly quickly and to clear the proposals wthout any delay. Accordingly, a new format is prescribed as annexed to this Memo. for rectification of Pay anomaly of Junior getting more pay. All the Chief Engineer's / Superintending Engineer's and other Officers are requested to furnish all the particulars in the said format. They are also requested to examine the correctness of the pay fixed to the junior as well as senior p to date (including the stepping up of pay of the senior and junior, if any, ordered earlier) and to certify to that effect in the above said new format.

3) The proposals received without following the format/unfilled format/improperly filled format will not be accepred. This will take effect from the date of issue of orders.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**S. VINEETH,**
Secretary (A/c)

From

To

Through Proper Channel

Sir,

Sub : Class-I/II/III service - Junior drawing more pay - Senior Thiru/Tmt.........................
O/o ...........................................................................................................................
Requesnting for rectfification of pay anomaly on par with my junior Thiru/Tmt.......................
O/o ...........................................................................................................................

******

I.................................................................................................... Oo..........................
...............................................................................................................................
junior/Thiru/Tmt.............................................................................................is drawing more pay than me at Rs. ..........................with effect from .......................... in the post of ...........................................................................I request that the above pay anomaly may be rectified and my pay may be refixed at Rs .................................................. with effect from..........................

2) I am aware that on rectification of pay anomaly my date of increment is likely to be postponed on par with junior referred above.

3) I am considering my request for the rectification of Pay Anomaly by the TANGEDCO authorities as stated above and if it is found later at any time that excess amount has been paid to me in view of the present fixation of pay on par with my junior, I undertake to refund the excess payment, if any to the TANGEDCO.

Yours faithfully,

Place : (xxxxxxxxx)

Date :

## FORMAT FOR RECTIFICATION OF PAY ANOMALY IN TANGEDCO SERVICE - DETAILS:

| | | *Senior* | *Junior* | *Reference* **Page No in SB** |
|---|---|---|---|---|
| 1. Name of the Individual | :- | | | |
| 2. Date of Birth | :- | | | |
| 3. Date of Superannuation | :- | | | |
| 4. **Posts held:-**<br>Date of Joining<br>Date of Regularization | | | | |

4. Pay Drawn Particulars from entry level post to till date
   [From the entry level post to post held till date, including Selection Grade/Special Grade post held if any]

| **Senior** | | | | | | | **Junior** | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Post Held | Scale of pay Band/ Pay Matrix (Rs) | Date | Pay (Rs) | Reason Regulation For pay Fixation | Reference Page No. In SB | | Post Held | Scale of pay Band/ Pay Matrix (Rs) | Date | Pay (Rs) | Reason Regulation For pay Fixation | Reference Page No. In SB |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

*Whether by Pay fixation or by annual increment or by Stepping up of pay on par with junior etc.

(i) In the case of pay fixation to specify the regulation (i.e) under SR33(b)/37/48 etc.

(ii) In the case of Stepping up of pay, to specify under which Regulation (i.e) under SR 48 or TNEB revised scale of pay Regulation ___________ etc.

**The following details shall be specifically furnished in the above statement:-**

(a) Date of tests passed by senior & junior and drawal of incentive increments for sports/ PG/Ph.D., etc.

(b) Promotion option exercised in higher posts (Date of promotion/Accural of increment).

(c) Details of EOL WA availed and punishements if any

(d) Audit slips/Disciplinary Proceedings/Punishment/Recovery details if any.

(e) Audited copy of Wage Revision fixation statements of senior & junior covering the period of anomaly till last revision.

**5. Particulars regarding pay anomaly**

| | | | |
|---|---|---|---|
| (i) | Name of the post and date from which pay anomaly arose | : | |
| (ii) | Seniority No in the post in which pay anomaly arose<br>(a) Senior<br>(b) Junior | <br><br>:<br>: | |
| (iii) | Seniority No in the lower post [(i.e) Prior to the post in which pay anomaly arose]<br>(a) Senior<br>(b) Junior | <br><br>:<br>: | |
| (iv) | Whether temporarily promoted, if so mention the date of regular promotion<br>(a) Senior<br>(b) Junior | <br><br>:<br>: | <br><br>Yes / No<br>Yes / No |
| (v) | Reason for anomaly : | | |
| (vi) | Specify the Rule under which the said anomaly is to be rectified | | |

It is certified that the Pay Anomaly fixations/increments sanctioned to the junior Thiru/ Tmty ____________________________________________ and Senior Thiru/Tmty ____________________________________________ from their date of entry into Service to the date on which the pay anomaly arose between them are verified and found correct.

2. It is further certified that all the previous stepping up of both senior and junior on par with their juniors as per the provisions under TNEB Revised Scale of pay Regulations issued from time to time, is verified and found correct.

(Authority which empower to step up the pay of the senior)

#Secretary/Chief Engineer/Superintending Engineer

#Strike off wherever not applicable



# பெண் என்னும் அற்புத ஆலமரம்



வேராய், விழுதாய்!
மண்ணாய் மரமாய்!
மானிடம் வாழ
மாசுகளை சுவாசிப்பவள்!

சுமை என்று தெரிந்தும்
சுகமாய் சுமப்பவள்!
வலி என்று தெரிந்தும்!
வரம் கேட்பாள்!

உயிர் ஒன்று தந்து!
உறவை வளர்ப்பாள்!
உயிரின் பாதி தொலைத்தும்
உலகில் வாழும் அதிசயம் பெண்!

''தேவை'' என்ற வார்த்தையை!
தேவதைகள் உபயோகிப்பதில்லை!

பெற்றோரை பேணி வளர்த்த உறவுகளை!
விட்டுப் பயணிப்பதால் தான்
கங்கை கூட மங்கை பெயர் பூண்டதோ!

ஓயாமல் சுழன்று கொண்டிருப்பது
பூமி மட்டுமல்ல!
உழைக்கும் மகளிரும் தான்!

பறக்கச் சிறகுள் கேட்டோம்!
கிடைத்ததோ கூண்டோடு!
கூடிய சிறகு!

வரும் காலத்தில்!
'வர'தட்சணை கொடுக்க மாட்டோம்!
உங்களுடன் வாழ
எங்களுக்கு வேண்டும்!
''தட்சணை''
அதுவே பெண்மைக்கு ஆண்!
செய்யும் ''லட்சார்ச்சனை!''


ஆக்கம்
**திருமதி. ஆ. தனபாக்கியம்**
கணக்கு மேற்பார்வையாளர்,
நகரியக் கோட்டம்/மாநகர்/கோவை

# பெண்ணின் முன்னேற்றமும், பெருமையும்

**எம். பாரதி,** மாநிலச் செயலாளர், மகளிரணி

**அ**ரிதரிது மானிடர் ஆதல் அரிது. அதனினும் இப்பூவுலகில் பெண்ணாய் பிறத்தல் அரிது.

உடலுறுதி கொண்ட ஆணைவிட மனவுறுதி கொண்ட பெண் சிறப்பு மிக்கவள். தாயாக, மகளாக, மனைவியாக மற்றும் சகோதரியாக என வாழ்வின் அனைத்து நிலைகளிலும் நிறைந்து இருப்பவள் பெண்.

பெண்களின் பெருமைகளை பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிந்து கொள்ளலாம்.

சங்ககாலத்தில் பெண்கள் புலவராகவும், தவப்பெண்ணாகவும் வாழ்ந்த ஔவையார், காரைக்கால் அம்மையார் போன்றோரையும் கற்புகரசியாக வாழ்ந்த நளாயினி, சந்திரமதி போன்ற வர்களை நாம் இன்று தெய்வமாக வழிபடும் கண்ணகி, வீர மங்கையராக வாழ்ந்த வேலுநாச்சியார் மற்றும் ஜான்சிராணி போன்ற சரித்திர சாதனை படைத்த பெண்களை இன்று வரை பெருமையோடு போற்றி புகழ்கிறோம்.

இதற்கும் மேலாக பெண்களை புண்ணிய நதிகளோடு ஒப்பிட்டு தெய்வமாக வழிப்பட்ட இந்த சமுதாயத்தில் காலப்போக்கில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு, பெண் சிசு கொலை, உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம் என பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. பெண்களை அடிமைகளாக்கி இழிவுபடுத்துவதோடு அவர்களை தங்களுக்கு சாதகமாகவும் பயன்படுத்துவதும் பெண் என்பதால் அவளை சமுதாயத்தில் இருந்து ஒதுக்கி வைத்தும் அடுப்படியே அவளுக்கு சொர்க்கம் என்று பெண்களை வீட்டிற்குள்ளேயே முடக்கி வைத்தனர்.

பெண் அடிமைத்தனத்தை போக்கி அவர்கள் இந்த உலகில் சக மனிதர்களாக வாழ வேண்டும். தங்களுக்கு விதிக்கப்பட்ட தடைகளை கடந்து புதுமைப் பெண்களாய், புரட்சி பெண்களாய் முன்னேற்றம் காண வேண்டும். பெண் விடுதலை பற்றிய விழிப்புணர்வை அவர்களுக்கு ஏற்பட வேண்டும் என பாரதி, பெரியார் போன்றவர்கள் போராடினார்கள்.

இதன் காரணமாக பெண்கள் தங்களின் பலம் என்னவென்று உணரத் தொடங்கினர். தங்களின் உரிமைக்காக தாங்களே போராடத் தொடங்கினர். மனவலிமையோடு போராடிய அவர்கள் அதில் வெற்றியும் பெற்றனர்.

பெண்கள் பல்வேறு தடைகளை கடந்து கல்வி அறிவின் மூலம் வீட்டிலும், நாட்டிலும் தங்களின் நிலையை இந்த உலகிற்கு உயர்த்தி காட்டினர்.

இன்று பெண்கள் மருத்துவம், கல்வி, விஞ்ஞானம், தொழில், நீதி, காவல் மற்றும் இலக்கியம் போன்ற துறைகளில் முன்னேற்றம் கண்டு ஆணுக்கு நிகராக தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி நடை போடுகின்றனர்.




நகர்ப்புற பெண்கள் மட்டுமின்றி கிராமப்புற பெண்களும் சிறுசிறு கைத்தொழில்கள் மூலம் தன் குடும்பத்தின் தரத்தை உயர்த்தி ஒப்பற்ற இல்லத்தரசிகளாக இந்த சமுதாயத்தை முன்னெடுத்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெண்கள் அரசுத்துறை, தொழில்துறை மட்டுமல்லாமல் அரசியலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அதிலும் தலைமைப் பண்பு மிக்கவர்களாக நிரூபித்துக் கொண்டுள்ளனர். இன்று அரசியலில் பெண்களின் பங்கு அளப்பரியதாக உள்ளது.

பெண் என்பவள் அவள் அடையும் துன்பம், அன்பு மற்றும் கோபம் என்று அனைத்து உணர்வுகளையும் அவளுக்குள்ளேயே அடக்கி கொள்பவள்.

பெண் என்பவள் தனக்கு நியாயமாக கிடைக்கக் கூடிய உரிமைகளுக்காக போராடி வெற்றி பெறத் தெரிந்தவள்.

பெண் என்பவள் அடம்பிடிக்கும் குழந்தையை அன்போடு அரவணைத்துக் கொள்பவள்.

பெண் என்பவள் இரவு, பகல் பாராமல் தன் குடும்பத்திற்காக உழைக்கக் கூடியவள்.

பெண் மென்மையானவள் என்றாலும் மன வலிமை மிக்கவள்.

தொட்டிலை ஆட்டிய கைகள் இன்று துப்பாக்கி ஏந்தி போரிடும் வீராங்கனைகளாகவும் உருவாகியுள்ளனர்.

அடுப்பூதும் கைகள் கூட பேனா முனையால் பல சாதனை படைக்கும் என நிரூபித்தவர்கள்.

இந்த நூற்றாண்டில் எதையும் சாதிக்கக் கூடிய வீரப்பெண்களாக திகழ்கின்றனர்.

இத்தனை முன்னேற்றம் கண்ட பெண்கள் தன் நிலையிலிருந்து சற்றே விலகி நிற்பதும் பயப்படுவதும் பாலியல் துன்புறுத்தல்களக்கு மட்டுமே.

இந்த சமுதாயம் பெண்களை பாலியல் வன்கொடுமையிலிருந்து முழுமையாக பாதுகாக்குமேயானால் அவர்கள் முன்னேற்ற பாதையில் முனைந்து செயல்பட்டு வீடும், நாடும் உயர தங்களை முழுமையாக அர்ப்பணிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதை கருத்தில் கொண்டு பெண்மையை போற்றுவோம்.

**அனைவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள்.**

# 71ஆவது குடியரசு தின விழாவில் முதன் முறையாக ‘சிறந்த சேவை’க்காக விருது பெற்ற மின்சார வாரியப் பணியாளர்களை வாழ்த்துகிறோம்!

மக்களுக்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் பொதுத்துறை நிறுவனங்களில் பொதுமக்களுக்கு உரிய நேரத்தில், ஊழலற்ற முறையில் சேவையாற்றும் பல்வேறு துறையில் பணியாற்றும் பணியாளர்களை தேர்வு செய்து அவர்களுக்கு குடியரசு தின விழாவில் தமிழக அரசு சார்பில் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

இது நாள் வரையில் மனிதனுக்கு அடிப்படை தேவையான உணவு, குடிநீர், கல்வி, காவல் போன்ற துறைகளில் விருதுகள் வழங்கப்பட்டு வந்தது.

இந்த ஆண்டு 2020-ம் ஆண்டு முதன் முறையாக மின்துறையும் சேர்த்து கௌரவிக்கப் பட்டது.

அதன்படி கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட கோவை மின்பகிர்மான மண்டலத்தில் பணிபுரியும் பல்வேறு பதவிகளில் உள்ளவர்களில் 16 பேர்கள் மேற்பார்வை பொறியாளர்களால் பரிந்துரைக்கப்பட்டது.

1. திரு. **C. முரளிதரன்,** செயற்பொறியாளர்/MRT/CEDC North/CBE
2. திரு. **M. சுப்பிரமணியம்,** செயற்பொறியாளர்/சோமனூர்/CEDC South/CBE
3. திரு. **G. காமராஜ்,** முகவர் முதல் நிலை/நகரம் - பீளமேடு/CEDC Metro/ CBE
4. திரு. **N. ரங்கசாமி,** மின்பாதை ஆய்வாளயர்/செட்டிப்பாளையம்/CEDC South/CBE
5. திரு. **P. அந்தோணிசாமி,** ஓட்டுநர்/சிறப்பு, பராமரிப்பு/CEDC South/CBE

மேற்கண்ட 5 பேரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கோவை மண்டலத்தில் அவரவர் பிரிவில் சிறப்பாக செயல்பட்டதற்காக கோவை மண்டல தலைமை பொறியாளர் அவர்களால் தேர்வு செய்து பரிந்துரைக்கபட்டது. அவர்கள் 5 பேருக்கும் கடந்த 26.01.2020-ல் கோவை வ.ஊ.சி. மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் கோவை மாவட்ட ஆட்சி தலைவர் திரு. K. ராஜாமணி, I.A.S. அவர்களால் நற்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவர்களில் திரு. G. காமராஜ், முகவர் முதல் நிலை/நகரம் - பீளமேடு அவர்கள் நமது எம்ப்ளாயீஸ் பெடரேஷனின் கோவை மாநகர் வட்ட கிளையின் பொருளாளர் ஆவார்.

கடந்த 2018-ம் ஆண்டு மின்பாதை ஆய்வாளரில் இருந்து முகவர் முதல் நிலையாக பதவி உயர்வில் கோவை மாநகர் வட்டத்தில் மிகவும் சவாலான பிரிவான நகரம்/ பீளமேடு பிரிவில் பணியேற்பு செய்தார். இப்பிரிவில் களப்பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் நகரின் மையப்பகுதியான இவ்வலுவலகத்தில் அதிகப்படியான உயர் மின் அழுத்த மின் இணைப்புகள், கல்லூரிகள், IT கம்பெனிகள், உயர்தரமான ஹோட்டல்கள், தொழிற்சாலைகள், நகரின் முக்கிய VIP

நுகர்வோர்கள் மற்றும் அதிகப்படியான வர்த்தக நுகர்வோர்கள் என சிரமமான பிரிவாக உள்ள நிலையில், இப்பிரிவினை ஒட்டியுள்ள பீளமேடு துணை மின் நிலையத்தில் இருந்து வெளியேறும் 15 உயர் மின் அழுத்த மின்பாதைகளில் ஏற்படும் மின் தடைக்கு இப்பிரிவுதான் (First Reach) முதல் பகுதி என்பதால் அடிக்கடி மின்தடை ஏற்படும் என்பதால் இப்பிரிவில் பணியாற்ற யாரும் முன்வரமாட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் திரு. G. காமராஜ் இப்பிரிவில் ஏற்படும் மின்தடைகளை உடனடியாகவும், குறுகிய நேரத்திலும் சரிசெய்து மின் நுகர்வோர்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்க உரிய நடவடிக்கை எடுத்துவிடுவார்.

மேலும் மின் நுகர்வோர்களின் குறைகளை உடனடியாக எவ்வித சிரமமும் இன்றி சரிசெய்து கொடுத்துவிடுவார். இதற்கு இடையில் பீளமேடு துணை மின்நிலையத்தில் இயக்குநர் முறைப்பணியையும் மேற்கொண்டு, தனது அலுவலகப் பணியையும் கவனித்து வருகிறார். குறைவான பணியாளர்களை வைத்துக் கொண்டு எந்தவிதமான சிரமமான பணியாக இருந்தாலும் இரவு, பகல் பாராமல் உரிய நேரத்தில் செய்து முடித்துவிடுவார்.

குறிப்பாக அன்றாடம் தனது பணிக்காக மின் நுகர்வோர்களிடம் எவ்வித பலனையும் எதிர்பார்க்காமல் செய்து கொடுப்பார். இதனால் பீளமேடு பகுதியில் நுகர்வோர்களிடம் மிகுந்த நற்பெயரை பெற்றுள்ளார். மேலும் தொழிற்சங்கத்தில் பொறுப்பாளராக இருந்தும் வாரிய பணிகளுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல், தனது தொழிற்சங்கப் பணியையும் செய்து வருவது மிகவும் சிறப்பு.

இதனால் வாரிய அதிகாரிகள் மத்தியில் காமராஜ் தொழிற்சங்கப் பொறுப்பாளராக இருந்தாலும் தனது பணியை சிறப்பாகவும், விரைவாகவும் செய்து விடுவார் என்று கோவை மாநகர் வட்டத்தில் பேசப்படுவது முக்கிய தகவலாகும்.

தனது சங்க உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் மற்ற தொழிலாளர்களுக்கும் சங்க வேறுபாடின்றி அவர்களுக்கு தேவையானதை உடனடியாக செய்து கொடுப்பதால் தொழிலாளர்கள் மத்தியில் நற்பெயர் பெற்றுள்ளார்.

தொழிற்சங்கப் பணியிலும், வாரியப் பணியிலும் மிக சிறப்பாக செயல்படும் திரு. G. காமராஜ், முகவர் நிலை / நரம் - பீளமேடு, பொருளாளர்/ எம்ப்ளாயீஸ் பெடரேஷன் / கோவை மாநகர் அவர்களையும், அவருடன் நற்சான்றிதழ் பெற்றவர்களையும் தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் / கோவை மண்டலம் சார்பாக வாழ்த்துகிறோம்.

**K.P. சீனிவாசன்**

*மண்டல செயலாளர்/கோவை*

---

2020 பிப்ரவரி 8ல் திருநெல்வேலி ஹோட்டல் ஆரியாஸில் நடைபெற்ற **TNEB வரைவாளர் சங்கப் பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய மாநில நிர்வாகிகள்** அனைவரது பணி சிறக்க நல்வாழ்த்துகள்.

**- *ஆசிரியர்***

**ஆ. கண்ணாதுரை,** D.E.E.
மாநில துணைத்தலைவர்/ எம்ப்ளாயீஸ் பெடரேஷன்
முன்னாள் பொதுச்செயலாளர்/வரைவாளர் சங்கம்
உதவி செயற்பொறியாளர்/மின்னியல் (ஓய்வு)

# ஒளிமயமான எதிர்காலம் நோக்கி

**பொ**துப்பணித்துறையில் இருந்து பிரித்து 01.07.1957 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம் அமைக்கப்பட்ட சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின் 31.05.1967 அன்று வரைவாளர் இனத்தின் நலத்தை பாதுகாக்கவும், வளர்ச்சியின் தேவையை உணர்ந்தும் தமிழ்நாடு மின்வாரிய வரைவாளர் மற்றும் படிவரைவாளர் சங்கம், (TNEB Draughtsmen and Tracers Union) ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் படிவரைவாளர் (Tracer) என்ற பதவி உதவி வரைவாளர் (Assistant Draughtsman) என்று தமிழ்நாடு அரசும், மின்சார வாரியமும் பெயர் மாற்றம் அளித்த பின் சங்கத்தின் பெயரையும் வரைவாளர் சங்கம் (TNEB Draughtsmen Union) என்று மாற்றப்பட்டது.

சங்கத்தின் நிறுவன தலைவர் திரு. C. நம்மாழ்வார், பொதுச்செயலாளர் திரு. K. ஆறுமுகம், பொருளாளர் திரு. M. தாமோதரன் ஆவர். பணியாற்றிய அனைத்து வரைவாளர்களையும் சங்க உறுப்பினர்களாக்கி தன் சிறப்பான செயல்பாட்டால் அடுத்த ஆண்டே BP. 2822 dt: 31.12.1968 மூலம் இனவாரி வாரியப் பணியாளர் தொழிற்சங்கமாக அங்கீகாரம் பெற்றதுடன் சென்னை வாரிய அலுவலக வளாகத்திலேயே சங்க மனையும் பெற்றது. அப்போது திரு. B. ராஜசேகரன் தலைவராகவும், திரு. S. தண்டபாணி பொதுசெயலாளராகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

சங்கம் ஆரம்பித்த நாளிலிருந்து தனித்து இயங்கி வந்த வரைவாளர் சங்க வளர்ச்சியில் ஓர் மைல்கல் என 12.03.1978 அன்று தூத்துக்குடி பெரிய காட்டன் சாலையில் உள்ள மார்த்தாண்டம் சத்திரத்தில் நடந்த மாநிலப் பொதுக்குழுவைக் கூறலாம். ஆம் அன்று தான் தொழிற்சங்க மாமேதைகள் Dr. SCK., P.E. ஈப்பன் ஆகியோர் தலைமையிலான பெடரேசனோடு இணைந்தது.

தொழிற்சங்க மேதை Dr. SCK 26.06.2003-ல் மறையும் வரை வரைவாளர் இனம் வளர பல்வேறு உத்திரவுகளைப் பெற்றுத் தந்த பொற்காலத்தை நன்றியுடன் நினைவு கொள்வோம். முக்கியமாக

- ★ 1.12.1979 ஊதிய மாற்றில் (BP. 252 dt : 19.11.1979) தொழில்நுட்பப் பிரிவுகளுக்கு எழுத்துத்துறைக்கு இணையான ஊதிய விகிதங்கள் பெற்றது.
- ★ வரைவாளர்கள் நார்ம்ஸ் BP 452 dt : 22.08.1983 (SCK அவர்களின் பெருமுயற்சியால் அவருடன் திரு. R. பெருமாள்சாமி மற்றும் வரைவாளர் சங்க பொதுசெயலாளர் S.R. ராமதாஸ் தலைவர் திரு. M. ஆறுமுகம் ஆகியோர் கையொப்பமிட்டனர். (வாரியத் தலைவர் திரு. B. விஜயராகவன் அவர்கள்)
- ★ வினியோக வட்டங்களுக்கு முதன்மை தலைமை வரைவாளர் பதவிகள்
- ★ முதன்மை தலைமை வரைவாளர் ஊதிய விகிதத்தை அதிகாரிகள் நிலைக்கு உயர்த்தியது மற்றும் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் முதல் நபராக (First Name) பொருந்தியது.

SCK அவர்களின் மறைவுக்குப் பின் நாம் தொழிற்சங்க மரபும் கொண்ட கொள்கையில் மாறாதவர்களாக இருந்தும் கோரிக்கைகளை வென்றெடுப்பதில் உரிய பாதுகாப்பும் அரவணைப்பும்

இல்லை என்பதால் 26.01.2018 அன்று திருச்சி மாநிலப் பொதுக்குழுவில் 'தனித்து இயங்குவது' என்ற முடிவை செயல்படுத்தினோம்.

மாறும் இவ்வுலகில் மாற்றங்கள் மட்டுமே நிலையானது ஆனாலும் Every project begins with a Draughtsman's Desk என்ற நிலை மின்வாரியத்தைத் தவிர பிற துறைகளில் மாறவில்லை என்றால் மிகையாகாது. இந்த உரிமையை இங்கும் மறுக்க இயலாது.

கடந்த பல ஆண்டுகளாக அரசின் கொள்கை முடிவுகள் என்ற பெயரில் நேரடி நியமனம் செய்யப்படாததால் வரைவாளர் இனத்தின் எண்ணிக்கை வெகுவாகப் பாதித்து, அருகி வரும் சிட்டுக்குருவி இனத்தைப்போல ஆகிவிட்டது. ஆனால், சிறுபான்மையை எங்கிருந்தாலும் அழிக்க முடியாது என்பதே உண்மை.

இந்நிலை மாறுமா? இதற்கு விடிவுகாலமே இல்லையா? என்று கிளர்ந்த சிந்தனையின் வெளிப்பாடுதான் 08.02.2020 அன்று திருநெல்வேலியில் நடந்த வரைவாளர் சங்கத்தின் மாநிலப் பொதுக்குழுவில் கலந்து கொண்ட அனைவராலும் இயற்றப்பட்ட தீர்மானம் **''வரைவாளர் சங்கம் தமிழ்நாடு மின்சார வாரிய எம்ப்ளாயீஸ் பெடரேஷனோடு இணைவது (Affliation) என்ற தீர்மானம்''.**

08.02.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத்தின் மாநிலப் பொதுக்குழு தமிழ்த் தாய் வாழ்த்துடன் துவங்கியது. தலைவர் திரு. S. ராஜன் அவர்கள் உடல்நிலை சரியின்றி பயணித்து கலந்து கொள்ள இயலாததால் துணைத்தலைவர் திரு. N. சௌந்திரராஜன் தலைமை தாங்கினார்.

முன்னதாக காலையில் நடந்த மாநில செயற்குழுவில் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டது. தமிழகம் முழுதுமுள்ள வரைவாளத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டது சிறப்பை அளித்தது.

வரவேற்புரை திரு. L. மணிகண்டன் இணைச்செயலாளர் திருநெல்வேலி அவர்கள் வாசித்தார்.

பொதுசெயலாளர் திரு. P. ரங்கநாதன் தன் ஆண்டறிக்கையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் வரைவாளர் சங்கத்தின் நடவடிக்கைகள் குறித்தும் பதவிகள், பதவி உயர்வுகள் மற்றும் புதிய ஊதிய மாற்று ஒப்பந்தத்தில் கலந்து கொண்டது போன்ற சங்க செயல்பாடுகளை அவையின் முன் வைத்தார் கரவொலி மூலம் அனைவராலும் பாராட்டப்பட்டது.

பொருளாளரின் வரவு செலவுக் கணக்குகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் திட்டங்களில் உள்ள கோரிக்கைகள் மற்றும் நிலவரங்கள் குறித்தும் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் பேசினர். பொதுசெயலாளர் பதிலுக்குப் பின் புதிய நிர்வாகிகளை தேர்ந்தெடுக்க முன்னாள் பொதுசெயலாளர் திரு. A. கண்ணாதுரை தேர்தல் அதிகாரியாக செயல்பட்டு சங்கவிதிகளின்படி தமிழ்நாடு மின்வாரியத்தில் பணியாற்றும் வரைவாளர்களே வரைவாளர் சங்கத்தின் உறுப்பினர்களாக தகுதியுள்ளவர்கள். ஆகவே, ஓய்வு பெற்ற வரைவாளர்கள் பொறுப்பாளர்களாக நீடிக்க சங்கவிதி இடம் தரவில்லை என்பதை விளக்கிய பின்னர் பொறுப்பாளர் தேர்தல் போட்டியின்றி முடிக்கப்பட்டது. முன்னாள் இந்நாள் பொறுப்பாளர்கள் கௌரவிக்கப் பட்டனர். தீர்மானங்கள் இயற்றப்பட்டது.

ஒருமனதாக அனைவராலும் தீர்மானிக்கப்பட்டதன்படி எம்ப்ளாயீஸ் பெடரேஷனோடு இணைப்பு விழா மற்றும் பணி ஓய்வு பெற்ற பொதுசெயலாளர் திரு. P. ரங்கநாதன் அவர்களுக்கு பாராட்டுவிழா இரண்டிற்கும் நம் அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினர்களாக எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநிலத்தலைவர், திரு. S. மணிகண்டன், பொதுசெயலாளர் திரு. A. சேக்கிழார்,

பொருளாளர், திரு. J.L. பாஸ்டின்ராஜ் துணைத்தலைவர்கள் திரு. N. முத்தையா, திரு. K. சிவசுப்பு பாண்டியன், திருநெல்வேலி திட்டத்தலைவர் திரு. S. இராமச்சந்திரன், செயலாளர் பாலசுப்பிரமணியன் திருநெல்வேலி காற்றாலை கிளை செயலாளர் திரு. V. அருண்ராஜ் மற்றும் நெல்லை கிளையின் முக்கிய தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பொதுசெயலாளர் முன்னெடுத்து வருகை புரிந்ததும் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் பெரும் நம்பிக்கையுடனும் வரவேற்றனர். தலைவர் திரு. S. மணிகண்டன் அவர்கள் தொழிலாளர்கள் திரண்டு ஒற்றுமையுடன் இருக்க வேண்டுவதன் அவசியத்தை உரைத்தார். BSNL, AirIndia போன்ற பொதுத்துறைகளுக்கு நேர்ந்துள்ள ஆபத்தை விளக்கினார்.

பொதுசெயலாளர் திரு. அ. சேக்கிழார் அவர்கள் தன் இயல்பான பேச்சாற்றலால் அனைவரையும் கவர்ந்தார். 53 ஆண்டுகள் வயதான வரைவாளர் சங்கம் மூன்று ஆண்டுகள் மட்டும் ஆன எம்ப்ளாயீஸ் பெடரேஷனோடு இணையும் முடிவை வரவேற்கிறோம். நேர்மையான நம் செயல்பாடும் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற தளராத முயற்சியுமே வெல்லும். 27.12.2018 அன்று நடந்த மாநில மாநாட்டில் உதவி வரைவாளருக்கு தனித்தீர்மானமும் கொண்டு வந்து விளக்கியதையும் மற்றும் அனைத்து துவக்க நிலைப்பதவிகள் நிரப்பப்பட வேண்டியதன் அவசியத்தையும் கூறினார்.

எம்ப்ளாயீஸ் பெடரேஷன் எடுக்கும் நடவடிக்கைகளில் இயன்றவற்றிற்கு உடன் ஒத்துழையுங்கள். தனித்துவம் கெடாமல் உங்களை எம்ப்ளாயீஸ் பெடரேஷனோடு ஒருங்கிணைந்து செயல்படுங்கள் என்று பேசினார். மேலும் பணி ஓய்வு பெற்ற முன்னாள் பொதுசெயலாளரை வாழ்த்திப் பேசி கௌரவித்தார்.

புதிய நிர்வாகிகளாக தலைவர் திரு. B. பொன்னம்பலம் பொதுசெயலாளர் திரு. R.M. சேதுராமன் மற்றும் பொருளாளர் திரு. D. பிரகாஷ் பெடரேஷனோடு இணைக்கப்பட்ட தீர்மான கடிதத்தையும், இணைப்புக் கட்டணத்தையும் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பொதுசெயலாளரிடம் அளித்தனர்.

வரைவாளர் சங்கத்தின் முன்னாள்/இந்நாள் தலைமை நிர்வாகிகளுக்கு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சார்பாக பொன்னாடை அணிவித்து பாராட்டப்பட்டது. திரு. P. ரங்கநாதன் அவர்கள் ஏற்புரையும் மாநில பொதுசெயலாளர் திரு. R.M. சேதுராமன் நன்றியுரையுடன் முப்பெரும்விழா இனிது முடிந்தது.

எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பொதுசெயலாளர் தலைவர் மற்றும் பொருளாளர் இன்முகத்தோடு அளவளாவி அனைவரோடும் மதிய உணவை பகிர்ந்து கொண்ட பாங்கு 11.03.1979 அன்று ஈரோட்டில் நடந்த மாநிலப் பொதுக்குழுவில் மாபெரும் தொழிற்சங்கத் தலைவர் ஐயா P.E. ஈப்பன் அவர்கள் கூறியது நினைவுக்கு வந்தது. ''மின்சார வாரியத்தில் நாங்கள் பெரிய அமைப்பாக விளங்கினாலும் இணைப்புச் சங்கமாக வரைவாளர் சங்கம் அளவில் சிறியதாக இருந்தாலும் ஒரு தாய்க்கு கைக்குழந்தை தான் செல்ல குழந்தை (Pet child) அதன் மீது தான் அதிக பாசம் செலுத்துவாள். பசியறிந்து ஊட்டுவாள் அதைப் போல நாங்கள் உங்களை பாதுகாப்போம்'' என்றார்.

ஆம் அவர்கள் மறையவில்லை. இந்த நலிவடைந்த நிலையில் உள்ள வரைவாளர் இனத்தை காப்பாற்ற தாயினும் சாலப்பரிந்தூட்டும் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் தலைவர்கள் உருவில் வந்து விட்டனர் வரைவாளர்களுக்கு மட்டுமல்ல அனைத்து பிரிவினருக்கும் ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பது என் உள்ளத்தில் தெரிகிறது.

**வாழ்க வரைவாளர் சங்கம்!** **வாழ்க எம்ப்ளாயீஸ் பெடரேஷன்!**
**வளர்க நம் ஒற்றுமை!** **வெல்க நம் கோரிக்கை!**

## வரைவாளர் சங்க பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட பொறுப்பாளர்கள் விவரம்

**TNEB DRAUGHTSMEN UNION**
**Regd no.126/MDS**
144 Anna Salai, Chennai -600 002

**8.2.2020 அன்று திருநெல்வேலி, ஹோட்டல் ஆர்யாஸ்-ல் நடைபெற்ற வரைவாளர் சங்க பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் பட்டியல்.**

### தீர்மானங்கள்

**தீர்மானம் 1 :** நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் வாரியத்தில் காலியாகவுள்ள உதவிவரைவாளர் பதவிகள் நேரடி நியமனம் மூலம் அனுமதிக்கப்பட்ட நார்ம்ஸ்-ன் படி (ஆக 452 dt.22.08.1983) நிரப்பப்பட வேண்டும்.

**தீர்மானம் 2 :** தலைமை வரைவாளருக்கு தமிழ்நாடு அரசுக்கு இணையான ஊதியம் அளிக்கப்படவேண்டும்.

**தீர்மானம் 3 :** உறுப்பினர் ஆண்டுச்சந்தா ரூ 500/-(ரூபாய் ஐநூறு)என உயர்த்திட இப்பொதுக்குழு ஒருமனதாக தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 4:** சங்கத்தின் 2018,மற்றும் 2019-ம் ஆண்டுகளின் வரவுசெலவு கணக்குகளை ஒருமனதாக அங்கீகிக்கிறது.

**தீர்மானம் 5 :** நிலவிடும் அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு 1967-ல் துவக்கப்பட்டு,1968-ல் வாரியத்தால் இனவாரிச்சங்கமாக (categorical Union) அங்கீகாரம் அளிக்கப்பட்டு தனித்துவமாக 53 ஆண்டுகளாக செயல்பட்டுவரும் தமிழ்நாடு மின்வாரிய வரைவாளர் சங்கம் (TNEB DRAUGHTSMEN UNION Regd.No.126/MDS), தொழிலாளர் ஒற்றுமையே என்றும் வெல்லும் என்ற குறிக்கோளோடு அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து, பாதுகாத்திட சிறப்புடன் செயல்பட்டுவரும் அமைப்பாக விளங்கும் தமிழ்நாடு மின்சார வாரிய எம்ப்ளாயீஸ் பெடரேசனோடு (TNEB EMPLOYEES FEDERATION Regd.No.3600/CNI) இணைந்து செயல்படுவது (AFFILIATION) என ஒருமனதாக தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 6 :** மின்சார சட்டத்தைப் பயன்படுத்தி மின்சார வாரியத்தை மேலும் பல கம்பெனிகளாகப் பிரித்து தனியார் மயப்படுத்த எடுக்கும் நடவடிக்கையை கைவிட வேண்டுமென மின்சாரவாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 7 :** மின்வாரியம் பாதுகாக்கப்படவும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் பெற்ற உரிமைகள் பாதுகாக்கப்படவும் தொழிற்சங்கங்களுடன் முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்திட வாரியத்தையும் தமிழ்நாடு அரசையும் இப்பொதுக்குழு கேட்டுக் கொள்ளுகிறது.

## மாநில நிர்வாகிகள்

*President* : **B.PONNAMBALAM**
Head Draughtsman
Kancheepuram

*General Secretary* : **R.M.SETHURAMAN**
CHD /Transmission
CHENNAI

*Treasurer* : **D.PRAKASH**
HD/P & C
Chennai

**Deputy General Secretaries** : **N.SOUNDARARAJAN**
CHD TTPS

**D. RAVI**
CHD SIVAGANGA

**K. LAKSHMANAN**
CHD DINDIGUL

**Vice Presidents** : **R. KRISHNAN**
CHD/KUNDAH Generation

**D.S. NAGORE GANI**
CHD/VALATHUR GTS

**M. MAHEEN**
CHD/TIRUNELVELI GEN

*Office Secretary* : **T KOTHANDAPANI**
HD/ Mechanical Projects

*Joint Secretaries* : **M. SUGUNA**
CHD/Coimbatore North

**C. DHANALAKSHMI**
CHD/Kadamparai

**M.R.KASI**
CHD/Salem

**A. UMAMAHESWARI**
CHD/Perambalur

**S DANDAYUDHABANI**
HD/Kancheepuram

**L. MONIKANDAN**
HD/Tirunelveli

**P. JANAKIRAMAN**
HD/South-I Chennai

**D. NALINI AANANTH**
HD/Coimbatore Metro

**M. MANGAYARKARASI**
CHD/CDC-I

**R. SUMATHI**
CHD West Chennai

**C. UVARAJAN**
CHD/Vellore.

**C. SARASANDAN**
CHD/GCC Trichy

**A. PARANTHAMAN**
CHD/GCC-II Chennai

**N. LALITHA**
HD/Tirunelveli Gen

**R. SHANMUGAM**
CHD/Trichy

**D. VIMALA**
HD/Cuddalore

**B. CHAKKARABANI**
HD/Tiruvannamalai

**P.V. PREMAKUMARAN**
HD/ERODE

**B.BALAJI**
HD/Mettur

**P. JAYAKUMARI**
HD/Kanyakumari

**S. NARAYANAN**
D'Man/ Central EDC
Chenna

**S. KASIRAJAN**
D'Man, O/o EE/Distn
Ramnad.

**A. ESWARAN**
D'Man/Virudhunagar

**M. NAGARAJAN**
D'Man/Madurai

# பங்களிப்பு ஓய்வூதியம் - CPS - விண்ணப்ப படிவம்

## ANNEXURE-I

**Application for Admission to the contributory pension scheme in TANGEDCO**
(To be furnished in Duplicate)

| CPS Index Number | |
|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Name of the Applicant | : | | |
| 2. | Sex | : | Male ❒ | Female ❒ |
| 3. | Marital Status | : | Married ❒ | Unmarried ❒ |
| 4. | Official Designation | : | | |
| 5. | Office to which attached | : | | |
| 6. | Service to which the applicant belongs | : | | |
| 7. | Date of first entry into Board Service | : | | |
| 8. | Scale of pay | : | | |
| 9. | Basic pay | : | | |
| 10. | Date of birth | : | | |
| 11. | Date of Superannuation | : | | |
| 12. | Whether appointment is regular or temporary | : | | |
| 13. | Whether recruited for Pensionable Service | : | Yes ❒ | No ❒ |
| 14. | (a) Community of the applicant (For Statistical Purposes Only) | : | SC / ST / BC / MBC / OC | |

(b) Residential address :

15. Nomination :
Name of the Nominee :
a) Age :
b) Relationship :

16. C.P.S. Pan opted** : Plan-I / Plan-II /Plan - III

17. Remarks if any :

Station : ***Signature of the applicant***
Date :

---

**CERTIFICATE TO BE FURNISHED BY THE HEAD OF THE OFFICE**

Certified that Thiru / Tmty / Selvi.............................................................. is a regular emloyee appointed to non-pensionable service and is eligible to join the Contributory pension scheme.

***Signature of Head of the Office with***
***Full Address/Office Seal***

Station :
Date :

*Tick ❐ whichever is applicanble

** Not to be filled now.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **"எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்"**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**✆ : 9841446621 ❖ tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*